நிர்வாக ஆசிரியர்:
ஏ.எம்.செல்வராஜா

# அஞ்சலி



விலை =/45 JUNE 1971

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எந்த விதமான

கட்டிட சாமான்களுக்கும்

தொடர்பு கொள்ளுங்கள்

**26576, 26577**

(தொலைபேசி இலக்கங்கள்)

உங்களுக்கு வேண்டிய சகல வித மான கட்டிடச்சாமான்கள், டால் மியா இரும்பு உருக்குக் குழாய் கள், நீர் சப்ளை வடி காலுக்கு ஏற்ற சாமான்கள் எம்மிடம் கிடைக்கும்.

**செட்டிநாட் கார்ப்பரேஷன்**

**பிரைவேட் லிமிட்டெட்,**

**கெய்சர் வீதி, கொழும்பு 11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Please Always Remember to Visit:-*

## RATHNA MALIGAI

**THE MOST POPULAR PLACE FOR YOUTHFUL BEAUTIFUL GLITTERING SOVEREIGN GOLD JEWELLERIES**



வருக!

தங்க நகை வாங்க

ரத்ன மாளிகைக்கு

# *Rathna Maligai*

No. 48, D. S. SENANAYAKE VIDIYA,

KANDY.

Telegrams : **"DIAMOND"** DAIL : **630**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அஞ்சலி'க்கு

உளங்கனிந்த

வாழ்த்துக்கள்

★

903 கபூர் அன் ஸ்டீம் பீடி

★

உற்பத்தியாளரும் விநியோகஸ்தரும்:

N. B. அப்துல் கபூர்

102 / 2, ஆட்டுப்பட்டித் தெரு

கொழும்பு 13.

தந்தி: "Gaffoorbidi" டெலிபோன்: 34580


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள்

அச்சு வேலைகள்

எல்லாவற்றிற்கும்

★

எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்

★

லங்கா

எஸ்டேட் அன் கொமர்ஷியல் பிரின்டர்ஸ்

த. பெ. இலக்கம் 380

கொழும்பு.

டெலிபோன்: 25329 தந்தி: "ESTAPRESS"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With*

*Best*

*Complements*

*from*

V

**T. S. SILVEIRA & CO.,**

COMMISSION AGENTS.

33, OLD BUTCHER STREET,
COLOMBO.

T'phone: **26146.** T'gram: **Mornington**

**Residence :** 9, **St.** Lucia's Square
Kotahena,
COLOMBO-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

மாத சஞ்சிகை

விரோதிகிருது ௵ ஆனி ௴ * * * 1971 ஜூன் மாதம்



நிர்வாக ஆசிரியர்:

ஏ. எம். செல்வராஜா

★

அலுவலகம்:

198, நீர்கொழும்பு வீதி,

வத்தளை.

★ ★

சந்தா விபரம்:

அரை வருடம் ரூ. 3-00

ஒரு வருடம் ரூ. 6-00


உள்ளே...


தலையங்கம் ... ... ... 7

**தொடர் கதை**

மாறுதல்கள் (தெளிவத்தை ஜோசப்) ... 19

**கதைகள்**

ஓ .. நானும் காப்பாற்றுவேன் (மருதூர் வாணன்) ... 9

யேசுநாதர் என்ன சொன்னார் ... .. 13 (உதயணன்)

புதிய நட்சத்திரம் (செ. யோகநாதன்) 31

எப்படியும் பெரியவன் தான் ... ... 41 (தெணியான்)

ஆண் குரல் ... ... 55 (மொழிபெயர்ப்பு: ஐ. தி. சம்பந்தன்)

**கவிதைகள்**

சிலைகள் ( சீ. சாத்தனார் ) 30

ஏழைப் பிள்ளையார் (காசி ஆனந்தன்) .. 48

**கட்டுரைகள்**

அரபுப் பழமொழிகள் ... ... .. 18 (எஸ். எம். கமாலுத்தீன்)

மனோவசியமும் நனவடி நிலையும் (சபா ஜெயராசா) ... ... 28

தமிழ் நாவலின் போக்கு (சி. தில்லைநாதன்) ... .. 51



இந்த இதழில் வெளிவரும் கதைகள், கவிதைகள் ஆகியவற்றில் உள்ள பெயர்கள் யாவும் கற்பனையே. படைப்புகளில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR YOUR MEDICAL REQUIREMENTS
VISIT

★

# SRI LANKA PHARMACY LTD.,

39, TRINCOMALEE STREET,

KANDY.

DISPENSING CHEMISTS & WHOLESALE
DRUGGISTS

DISTRIBUTORS OF

**DUROL** CHERRY FLAVOURED
IRON TONIC

J & J BABY PRODUCTS

STOCKISTS OF
AYURVEDIC MEDICINES

T'phone: 606 T'grams: "SELPILLS"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்: 1

இதழ்: 5

அஞ்சலி

# நமது வடபகுதிச் சிறப்பு மலர்

மலையகச் சிறப்பிதழாக வெளிவந்த அஞ்சலியின் நான்காவது இதழுக்கு நாம் எதிர்பார்த்தபடி நாடெங்கும் கிடைத்துள்ள பெருவரவேற்பு மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. இதழின் ஒவ்வொரு பக்கத்திலும் மலையக மணம் கமழ்வதைப் பாராட்டி அஞ்சலி வாசகர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிந்துள்ளன. கடிதங்கள் அனுப்பிய எல்லோருக்கும் எமது நன்றி. வாசகர்களும், எழுத்தாளர்களும், விற்பனையாளர்களும், எமக்கு அளித்துவரும் ஆதரவு எமது பணியைச் சிறந்த முறையில் தொடர்ந்து செய்வதற்குப் பெரிதும் ஊக்கமளிக்கின்றது.

ஏற்கனவே அறிவித்திருந்தபடி அஞ்சலியின் ஏழாவது இதழ் வடபகுதிச் சிறப்பு மலராக வெளிவரவிருக்கின்றது என்ற நற்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். நமது நாட்டின் வடபகுதி மக்களது வாழ்க்கையை எல்லாக் கோணங்களிலும் பூரணமாய்ப் பிரதிபலிக்கக் கூடியதாக மேற்படி சிறப்பிதழ் அமைய வேண்டுமென்பதே நம் எல்லோரினதும் அவாவாகும். அதற்கமைய மலருக்கு வடபகுதி எழுத்தாளர்களிடமிருந்து விடயதானங்கள் வரவேற்கப்படுகின்றன.

மலரில் பிரசுரிப்பதற்கென அனுப்பப்படும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள் ஆகியன யாவும் இயன்றவரை நம் வடபகுதி மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டவையாயிருத்தல் விரும்பற்பாலது. வடபகுதி சம்பந்தப்பட்ட படங்களும் வரவேற்கப்படுகின்றன.

படைப்புகள் யாவும் நிர்வாக ஆசிரியர், அஞ்சலி 198 நீர்கொழும்பு வீதி, வத்தளை என்ற விலாசத்திற்கு 15 - 7 - 1971 க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

மலரில் பிரசுரிப்பதற்கு விளம்பரங்களும் வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அஞ்சலி' வாசகர்களுக்கு ஒரு

## புதிய குறுநாவல்

# "இருட்டும்வரை காத்திரு"

மணி மெல்ல எழுந்து திண்ணையில் எரிகின்றலாம்பை எடுத்துக்கொண்டு பெட்டகத்தடிக்குப் போனான். பெட்டகம் வெறுமையாகக் கிடந்தது. சுவர்க் கோழியின், மூளையை எரிச்சலூட்டும் கிறீச்சிடலைத் தவிர அங்கு வேறோர் ஒலியுமில்லை. அப்புவும் ஆச்சியும் குடிசைக்குள்ளே கிடந்தார்கள்.

வேம்பிலே கட்டி நின்ற மாடு 'அம்மா' என்று கத்தியது.

மணி, அடுக்களையின் முன்னாலேயுள்ள மாமரத்தின் கீழே வந்து நின்றான். மாம் பூக்கள் லேசாய் மணத்தன. வானத்தை நிமிர்ந்து பார்த்தான். உதயநிலவு ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சிக்கொண்டிருந்தது. உச்சி வானத்தில் படுத்துக்கிடக்கும் வெண்சடை நாய்க் குட்டிபோல ஒரு துண்டு முகில்......

**சே. யோகநாதனின் 'இருட்டும்வரை காத்திரு'**

**அஞ்சலி**

மாத சஞ்சிகை

## ஜூலை இதழில் ஆரம்பமாகிறது!

**இன்றே சந்தாதாரர் ஆகுங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓ...நானும் காப்பாற்றுவேன்..!

### மருதூர்வாணன்

''மரீனா, நீ இனிப் பிச்சை எடுக்கப் போகக்கூடாது. நான் உனக்கும் சேத்துப் பிச்சை எடுத்து உழைக்கிறேன்.'' என்று மனைவியைக் கட்டுப் படுத்தினான் காசின்பாவா.

''...நம்மட புள்ளை தலைப்பட்டா அவளுக்கு ஒரு கல்யாணமென்டு வீடென்டு கைக்கூலியென்டு குடுக்கத்துக்கெல்லாம் ஆருக்கிட்டப் போறது?'' என்று மரீனா விவாதித்தாள்.

'மரீனா நீ... இவ்வளவுகாலமும் பட்ட கஷ்டமெல்லாம் போதும் அல்லா நமக்கொரு வழிகாட்டாமே வுடமாட்டான். நீ பிச்சை எடுக்கப்போனா, நாலு காடயனுகள் ஒன்ன மானபங்கப் படுத்தி, ஒண்ட கற்பக் கெடுத்துப் போட்டா...'

''...என்ன சொல்றே?''

தனது பொன்னிதழ்களை மலர்த்தும் பொழுது மரீனாவின் தலைசுற்றியது. அவளின் கடந்த காலத்து நினைவுகள் இரைமீட்டிக்கொண்டிருந்தன.

மரீனாவின் தந்தை, மீன்பிடிக்க வலையும், தூண்டிலும் கையுமாகக் கல்லாற்று ஓடை, ஆறு, குளம், கடலுக்கெல்லாம் சென்று உழைத்து ஜீவியம் நடாத்திக் கொண்டிருந்தார். தனது ஒரே ஒரு மகளை, குர்ஆன் மவ்லூது பாத்திஹா வெல்லாம் ஓதுவித்தார். எட்டாம் வகுப்புவரை படிப்பித்தார், சிறுவயதிலேயே பேச்சுப்போட்டிகள், குர்ஆன் மனனப் போட்டிகளிலும் பல பரிசுகள் பெற்றிருந்தாள் மரீனா. தன் பதினைன்கு வயதிற்குள் கல்முனைத் தொகுதி மக்களின் வாய்களில் 'மரீனா மரீனா' என்று முணுமுணுக்கும்படி பெயர் பெற்று விளங்கிக்கொண்டிருக்கிறாள் மரீனா.

''படித்ததும், பாடசாலையும், புகழும் உனக்குப் போதும். இனிக் குடும்பமாக வேணும்'' என்று மரீனாவின் பெற்றோர் விரும்பினர். மரீனாவும் இசைந்தாள்.

மரீனாவுக்குப் பொருத்தமான நல்ல அழகு மாப்பிள்ளை தேடி அவளின் பெற்றோர்கள் அலையவில்லை.

''மரீனாவை நான் முடிக்கிறேன். கைக்கூலி, சீதனம் எதுவுமே தேவையில்லை. நான் முந்தி நீ முந்தி'' என்று பல பணக்கார மாப்பிள்ளைகள் போட்டி போட்டுக்கொண்டிருந்தனர்.

''இந்த மாப்பிள்ளைகளில், உனக்கு ஆரவிருப்பம் மகளே?'' என்று பெற்றோர்கள் வலிந்து கேட்டனர்.

''அல்லாஹ்வின் நாட்டப்படி, உங்களின் விருப்பப்படி...எதுக்கும் இப்ப என்ன அவசரம்?'' என்று மரீனா அடக்கமாகப் பெற்றோருக்குப் பதில் கூறினாள்.

கல்யாணப் பேச்சுக்கள் வரும்போதெல்லாம் இரத்தினச் சுருக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரீனு கூறுவாள். எனினும் அவள் தன்னைப்போல் ஒரு ஏழை மீனவனைக் கல்யாணம் முடிக்கவேண்டுமென்றே ஆசைப்பட்டாள்.

அவளின் மாமிமகன் முகையதீன் மரீனுவுடன் கூடிப்பழகியவன். இருவரும் நல்ல பொருத்தமான 'சோடி' என்பதைப் பெற்ருேரும் அறிவர். ஆனல் மரீனு முகையதீனை விரும்புவாளா? என்று அவர்கள் தமக்குள் ஆலாபனம் செய்துகொண்டிருந்த போதுதான்—

ஒரு நாள்—

இரவு, ஏழு மணி. பூரணை நிலவு கருங்கடலில் மிதந்து எழும் நேரம். 'புஸ்'ஸெனத் தென்னை இளங்கீற்றினூடாகத் தென்றல் தவழ்ந்துகொண்டிருந்த கடற்கரைக் 'குலனி'க் குடிசைகளில் மீனவர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள்;

மரீனு தன் படிப்பறையில் சிமினி விளக்கொளியில் நாயக வாசகம் படித்துக்கொண்டிருந்தாள்.

''மகள்...என்ன மகள் புத்தகத்தை வெச்சிக்கி யோசிக்கிருய்? என்று தந்தை மகளைப் பார்த்து கேட்டவாறு வலை முடித்துக்கொண்டிருந்தார்.

''ஒன்றுமில்லை வாப்பா? 'ஈமானுக்கு அசல், மௌனம்.'' 317 நாயக வாசகம் இப்படிக்கூறுகின்றது. இன்னொரு இடத்திலே, ''சீமானைப் பார்க்கினும், வறுமையானுக்கு இருக்கிற சிறப்பு, எனக்கு எல்லாச் சிருஸ்டிகளைப் பார்க்கினுமிருக்கிற சிறப்பைப் போலிருக்கிறது'' என்று 234வது நாயகவாசகம் கூறுகிறது வாப்பா'' என்று ஆழ்ந்த கருத்தை மரீனு வாப்பாவிடம் கூறினுள்

''எங்களுக்கு ஒன்ட படிப்புகள் ஒன்டும் விளங்குதில்லை. ஒரு மாப்பிளையளுக்கும் சம்மதப்படாமே ஒரே படிப் பென்டு படிச்சிக்கிட்டே இரிக்காய்?''

மரீனுவின் உம்மா நச்சரிப்புக் கொட்டியவாறு குசினியுள் கரிமீன் பொரித்துக்கொண்டிருந்தாள்.

''...ஆமாம் உம்மா. நான், என்னைப் போலே வறுமையான, முகையதீன் மச்சானைக் கலியாணம் முடிக்க விரும்பி இரிக்கன். ஆனு நீங்கல்லாம்...''

''...இன்னு லில்லாஹி...இவ்வளவு காலமும் நாங்க அந்தப் பொடியன் முகையதீனை ஒனக்குக் கலியாணம் பேசுவம் என்டு யோசிச்சுத்தான் இரிந்தம். நீ விரும்புவாயோ என்டெலவா இரிந்தம்?''

பெற்ருேர்கள் அங்கலாய்த்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

★

மரீனுவுக்கும் முகையதீனுக்கும் ஆடம்பரமின்றி அன்பாகக் கல்யாணம் நடந்தது. நாட்கள் நகர்ந்தன. திடீரென முகையதீனுக்குக் காய்ச்சல் வலிகள் வந்தன. வாரங்களாகி, மாதங்களாகியும் நோய் வாய் தீர்ந்தபாடில்லை. மருந்து மருந்தென்று மரீனுவின் பெற்ருேர்கள் பணத்தை வாரி வாரி விரையமாக்கினர். பொருள் பண்டங்களை விற்றுச் செலவிட்டும் முகையதீனின் நோய் கூடியதே தவிரப் பயனில்லை. உடல் மெலிந்து உளம் நலிந்து உயிரும் பிரிந்துவிட்டது. மரீனு கதறினுள். அழுதாள் தொழுதாள். ஆயினும், மரீனு இத்தா இருக்கும்போது ஒரு குழந்தையும், பெற்ருள்.

மருமகன் மௌத்தான துக்கத்தில் மாமனுர் நோய்வாய்ப்பட்டார். மருந்து மருந்தாக இருந்த மண்குடிசையை விற்றும் பயனில்லை. புருசனும் மௌத்தாகிவிட்டார். தாயும் மகளும் 'இத்தா' இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆணுதவியற்ற அந்த அபலைகளுக்கு ஆதரவாக இருந்த ஒரே ஒரு மண்குடிசையை விற்ற பணமும் காலியாகிவிட்டது.

மரீனு உழைக்க முயற்சித்தாள். பாய் பின்னி உழைத்தாள். வருவாய் போதாமல் நெசவு செய்யப்பழகினுள்.

மகள், பிள்ளை பெற்ற பெருங்காயக் குடலோடு பாடுபட்டு உழைப்பதைப் பார்த்துப் பார்த்து மனம் வருந்தி வருந்திக் கிழவியும் நோய்வாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இறுதி இனி அவளால் ஒன்றும் செய்யமுடியாது.


பசி, பட்டினி, வறுமை பேயாகத் தலைதூக்கி நின்றுடியது. மரீனாவுக்குப் பாய்பின்னவும் நூல் இழைக்கவும், நெசவவும் தெரிந்தும், யாரும் தொழிற் கொடுக்க மறுத்தனர்.

''ஓரிரு வரிசத்துக்குள்ளே, வாப்பாவயும் தின்டு புரிசனையுந் தின்டவளே? ஒனக்குத் தொழில் தந்தா, நாங்களும் ஒன்னப்போலே தெருவில பிச்ச எடுக்கத்தான் போகவேணும். போபோ...''

வின் பெண்மையைச் சூறையாடவும் முனைந்தனர். அச்சமயங்களில் அவள் கூச்சலிட்டு விரட்டியும் இருக்கிறாள்.

ஒரு நாள், மிகவும் களைப்புடன் பகற் சாப்பாடற்று அலைந்துகொண்டிருந்தாள். பசி வயிற்றைக் கிள்ளிக் கொண்டிருந்தது. குழந்தை பசி பசியென்று பதறித்துடிதுக் கொண்டிருந்தது. கிழவியை நினைத்தால் பரிதாபமாக இருந்தது.

''மகளே...அல்லா நம்மை என்னத்துக்குத்தான் இப்பிடிப் பசியோடே படச்சானோ தெரியல்லே.'' அவள்



எல்லோரும் மரீனாவைத் தூரப் போக்கி நகைத்துக்கொண்டிருந்தனர்.

எங்கு சென்றாலும் அவளுக்கு எவரும் தொழில் கொடுக்கவில்லை. சிலர் ஏதேனும் எச்சிச் சோறு போட்டார்கள். மரீனா பிச்சை எடுத்துக் காலம் கடத்திக்கொண்டு, மர நிழல்களிலும், ஒட்டு விறுந்தைகளிலும் கிழவியுடனும் குழந்தையுடனும் உறங்கிக் காலம் கழித்து வந்தாள். சில சமயங்களில், தெருவோடிகளிற் சிலர் மரீனா

களைப்போடு இருந்த சமயம் அந்த வழியினால் ஒரு பிச்சைக்காரன் வந்துகொண்டிருந்தான். அவனுக்கு அதிகவயதில்லை. ஆனால் ஏழ்மை அவனை முதுமையாகக் காட்டிற்று. பல தடவை அவனை அவள் கண்டிருக்கிறாள்.

''..ஓ நீயா புள்ளை. மரீனா... எனும்மா ஒரு மாதிரி ஓயிச்சிக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிக்க? பகச்சோறு கிடக்கல்லையா?'' வந்தவன் கேட்டான்.

''இல்ல காக்கா. ஏந்தான் நம்மள யெல்லாம் அல்லா படச்சானோ நமக் கெண்டாத் தெரியல்லே''.

''நீ இருந்துக்கம்மா புள்ளை. நான் போய் அந்தா தெரியிற கடயில ஏதும் சாப்பாடு வேண்டியாறன்.''

''நல்ல மனிசன் காசிங் காக்கா. எப்பவும் என்னக் கண்டா நல்ல இரக் கந்தான்.'' அவள் தனக்குள் அவனது அன்பால் நெகிழ்ந்து கொண்டிருந் தாள்.

நாலெட்டில் நடந்து சென்று தேனீ ரும் சாப்பாடுமாகப் பறந்து வந் தான் காசின்பாவா.

''சை...அஞ்சி மணியாப்போச்சி. ஒரு மனிசனுவது ஒனக்கும் ஒம்புள்ளக்கிம் ஒருப்பம் கஞ்சித் தண்ணியாவது ஊத் தல்லையே. என்ன உலகண்டா. இதைப் படைச்சானே அந்த ஆண்ட வன் அவன் கட்டேடேலேபோக!''

அனுதாப சீர்த்தியுடன் தேனீரை மரீனுவிடம் நீட்டினன். நல்லாவயிறு நிறயக் குடிபுள்ளே?'' அன்பாகக் கூறியவாறு மரநிழலிற் சாய்ந்தான்.

திடீரென்று அவன் சொன்ன சொல் அவளைத் திடுக்கிடவைத்தது.

''இந்தா பத்து ரூபா...''

''பத்து ரூவாவா...? எதுக்காம்? அல்லாவே என்னக் காப்பாத்து'' ''அல்லாவா?...'' ஓ! நானும் காப்பாத்துவன்...ஒன்னைப்போல் இள வயசுப் பொண்ணு ஏன் பிச்சை எடுக் கணும். நான் ஒண்ணு சொல்றேன் கேக்கிறியா?

நானுன்னை நாலு பேரறியக் கலி யாணம் முடிச்சிக்கிறன். நீ என்னை நம்புவாயா?'' அவன் கெஞ்சினுன்.

''...நம்பவா...?'' மரீனு ஆச்சரியப் பட்டுக் கொண்டே மெல்ல எழுந்து யோசிக்கலானுள்.

# யாருடைய குரல்?

ஒரு மாலை நேரம், சங்கீதக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. இளம் பெண் ஒருத்தி பாடிக்கொண்டிருந்தாள். அவளது பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த ரசிகர் ஒருவர் தனக்கருகில் இருந்த நபரிடம் திரும்பி முணு முணுத்தார்.

''இது என்ன, அசிங்கம் பிடித்த குரல்! யார் அந்தப் பெண்? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது''

''அவள் எனது மனைவி''

அடுத்த நபர் கடுமையாகப் பதிலளித்தார். ரசிகருக்குச் சங்கடமாகிப் போய்விட்டது. மன்னிப்புக் கேட்கும் பாவனையில் கூறினர்.

''ஓ...மன்னிக்கவேணும். இவ்வளவு கேவலமாக உங்களது மனைவி யின் குரல் ஒலிப்பதற்கு நியாயமில்லை. பாடும்போது, மொழியிலுள்ள கரடு முரடுதான் அவளின் குரலை அப்படி ஒலிக்கச் செய்கிறது. இந்த உதவாக் கரைப் பாடலை இயற்றியவன் யாரென்று தெரியவில்லை...''

அந்த நபர் கடுகடுத்த முகத்தோடு மீண்டும் பதிலளித்தார்.

''அந்தப் பாடலை நான்தான் இயற்றினேன்''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுநாதர் என்ன சொன்னார்?

"உதயணன்"



வருடப் பிறப்புக்கு ஒரு வாரம்தான் இருந்தது. நான் பதுளையில் இருந்து புறப் பட்டேன். வழியில் சில வேலைகளை முடித் துக்கொண்டு யாழ்ப்பாணம் போகவேண் டும் என்பதுதான் எனது திட்டம்.

ஆனல்...

சேகுவேரா இயக்கத்தினர் அரசாங் கத்துக்கு எதிராகத் திடீர்த் தாக்குதல்களை மேற்கொண்டதன் விளைவாக நான் மத்திய மாகாணத்தில் மாட்டிக்கொண்டு விட்டேன். போக்குவரத்து வச திகள் எதுவும் கிடையாது. வானெலியில் நிமிடத்துக்கொரு அறிவித்தல் வெளியாகிக் கொண் டிருந்தது. ஊர்மக்களின் வாய் களில் பிரசவமாகி விசுவரூப மெடுத்து வானத்தையும் பூமியை யும் தொட்டுக்கொண்டு நின்ற வதந்திப் பிசாசுகள் திகிலூட்டித் திணறடித்தன. போதாதற்கு ஊரடங்குச் சட்டம் வேறு.

எனக்கு எங்கே போய் யாரு டைய காலில் விழுந்து எனது ஆறடி உடம்பையும் ஒளித்துக் கொள்ளலாம் என்று தெரிய வில்லை. ஒரே ஏக்கம்! ஒரே கலக் கம்! ஒரே குழப்பம்!

"இப்படியே நடுரேட்டில் நின்று தபசிருந்தீரானல், ராணு வக்காரன் தரிசனம் தந்து, உமது தபசை மெச்சிக் கயிலாய வாசலை அகலத் திறந்து விட்டு விடுவான். இதோ இந்தப் பக்கமாக கால் மைல்தூரத்தில் சாது சொக்கலிங் கத்தின் ஆசிரமம் இருக்கிறது. அங்கே போனல் இராப் பொழு தைக் கழித்து விடலாம். மிச் சத்தை நாளைக்கு யோசிக்கலாம்" என்று ஒரு நண்பர் இலவச ஆலோ சனை வழங்க முன் வந்தார்.

அதற்கு மேலும் யோசித்துக் கொண்டிருக்க எனக்கு அவகாசம் இல்லை. நான் ஆசிரமத்தை நோக்கி நடந்தேன். யமதர்ம ராஜன் அன்றைக்கு எனது 'பைலை' எடுத்து கணக்குமுடித்து வைத்திருக்கவில்லை. அதனல் நான் பத்திரமாக ஆசிரமத்தை அடைந்து விட்டேன்.

"அடே, சொக்கலிங்கம்! நீயா? நீ ஏன் சும்மா இருக்க முடியாமல் இப்படிச் சாதுவாகப் போனய்? உனக்கு அப்படி என்னவந்தது?" என்று தொண்டை வரைக்கும் வந்துவிட்ட வார்த்தை களைத் தலையில் அடித்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்பி விட்டு, ஒன்றுமேயில்லாத ஒரு சங்க திக்குள்ளே இந்த உலகமே அடங்கி யிருக்கிறது என்ற தற்கால நாகரீகப் போலித்தனத்தின் சூனியத்து நிழலுக் குள்ளே நான் நின்றுகொண்டு, ''சாது வுக்கு என்னைத் தெரிகிறதோ?'' என்று பவ்வியமாகக் கேட்டேன்.

என்னைப் பொறுத்தவரையில் அவன் -மன்னிக்கவும்- அவர் சாது என்ற சட் டையைக் கழற்றி மடித்து வைத்துவிட் டுப் பழைய சொக்கலிங்கமாகவே பழகினார்.

சொக்கலிங்கம் என்னோடு ஒன்ருகப் படித்தவர்- அவர் உத்தியோகம் பார்க் கத் தொடங்கிய பின்னரும் எங்களு டைய தொடர்பு கொஞ்சக் காலம் இருந்தது. பிறகு அவர் ஒரு நல்ல குடும் பத்திலே மனோன்மணிஎன்றஒரு பெண் ணைக் கல்யாணம் செய்துகொண்டு சந் தோஷமாக இருந்தார். நான் இரண் டொருதடவைஅவருடைய வீட்டுக்குப் போயிருந்தேன். மனோன் மணியும் அடக்க ஒடுக்கமான நல்ல குணங்கள் நிரம்பிய பெண்ணாகத்தான் எனக்குத் தோன்றினாள். பிறகென்ன வந்தது?

சொக்கலிங்கத்தை இங்கே எல்லோ ரும் சாது என்று தாராளமாக அழைக் கிருர்கள். என்ன காரணமாக அப்படி அழைக்கிருர்களோ தெரியாது. அவ ருக்கு இப்பொழுது வயது நாற்பதுக்கு மேல் இருக்கவேண்டும். அவர்வாழ்ந்து வந்த வீட்டையும் - அதாவது ஆசிரமத் தையும், அவருடைய போக்கு வாக்கு பேச்சு மூச்சு ஆகியவற்றையும் கொண்டு என்னுல் சில விஷயங்களை அனுமானிக்க முடிந்தது.

அங்கே பத்துப் பதினைந்து சிறுவர் கள் இருந்தார்கள். அவர்களெல்லாம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து நகரத் துக் கல்லூரிகளில்படிப்பதற்காக வந்து தங்கியிருக்கிருர்கள். அந்த மட்டும் தான் சங்கதியென்றுல் அதை ஓர்ஆசிர மம் என்று சொல்லாமல் ஒரு விடுதிச் சாலை என்று சொல்லுவது பொருத்த மாக இருக்கும், ஆனுல் சொக்கலிங்கம் சில சமயங்களில் கூட்டங்கள், பஜனை கள், பிரார்த்தனைகள் ஆகியவற்றை யும் நடத்துவதுண்டாம். இடை யிடையே இரண்டொரு அனாதைச்சிறு வர்களும் வந்து இருந்துவிட்டு அவர்க ளுடைய வேலைகள் முடிந்ததும்-அல் லது சொக்கலிங்கத்தின் வேலைகள் முடிந்ததும் போய்விடுவார்கள். இவை கள் தவிர, அதை ஓர் ஆசிரமம் என்று சொல்வதற்கு ஒரு பலமான ஆதார மும் உண்டு. ஆமாம், வாசலில் ஒரு பெரிய 'பிளாஸ்றிக்' பெயர்ப் பல- கையும் தொங்குகின்றதே!

''யேசுநாதர் என்ன சொன்னர்?', என்று சொக்கலிங்கம் என்னைக் கேட்டார்.

''என்னிடம் ஒன்றும் சொல்லவில்- லையே'' என்று நான் அவரையும் அவ ருடைய கேள்வியையும் புரிந்துகொள் ளாமல் வேறு ஏதோ நினைவாகச் சொல் லிவிட்டேன்.

''மடையா! யேசுக்கிறிஸ்து பெரு மான் உலக மக்களுக்கு என்ன சொன் னர்?'' என்று அவர் என்னைத் திருப்பிக் கேட்டார்.

''அவரா? எதையாவது சொல்லி யிருப்பார். அதெல்லாம் எனக்குத்தெரி யாதப்பா'' என்று சொல்லிவிட்டு, நான் எப்படி யாழ்ப்பாணம் போய்ச் சேர்வது என்று எண்ணிக்கொண்டிருந் தேன்.

"வலது கையால் செய்யும் தர்மத்தை இடது கை அறிய வேண்டாம் என்று அந்த மகான் சொன்னுர். ஓர் ஏழைக்கு வாழ்வளிக்க நான் முயன்றேன். அதை மனோன்மணியிடம் சொன்னல் கூட மாசு பட்டுவிடும் என்று எனது நெஞ் சுள்ளேயே வைத்திருந்தேன். அது எனது வாழ்வைச் சீர்குலைத்து ஊரை விட்டு உறவை விட்டு இங்கு வந்து ஆசிரமம் அமைத்துக்கொண்டு வாழ வைத்துவிட்டது. இல்லை............ சீர்குலைத்தது என்று கூடச் சொல்ல முடியாதுதான்........... என்று இழுத் தார்.

சொக்கலிங்கம் கூறிய விபரங்கள் சில இடங்களில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், கோர்வையற்று, முரண்பாடாகக் காணப்பட்டாலும் நான் எனக்குத் தெரிந்தவரையில் அவற்றை ஒழுங்கு படுத்திப் பார்த் தேன். சில இடைவெளிகளை எனது ஊகத்தினுல் நிரப்ப வேண்டியிருந்தது. பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன் காதைத் திருகி வாக்கியங்களில் உள்ள இறிட்ட இடங்களை நிரப்பக் கற்றுக்கொடுப்பதிலும் ஒரு தீர்க்க தரிசனம் உண்டோ?

* * *

சொக்கலிங்கம் உத்தியோகம் பார்த்த காலத்தில் 'கோவிந்தன் கோவிந்தன்' என்ருெருவன் அவனுடைய வேலைத் தலத்தில் காவற்காரனுக வேலை பார்த்து வந்தான். கோவிந்தனுச்குச் 'சொக்கலிங்க சுவாமிகள்' தான் வாலாயம். ஒவ்வொரு மாதத்திலும் பிற்பகுதியில் அவன் சொக்கலிங்கத்திடம் தனது கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி ஏதாவது 'ஹெல்ப்' கேட்க வேண்டியிருந்தது. சொக்கலிங்கமும் அவ்வப்போது நாலோ பத்தோ கொடுத்து உதவுவது வழக்கம். அப்படிக் கொடுக்கப்பட்டவை சில சமயங்களில் திரும்பி வரும். சில சமயங்களில் திரும்பி வராமலும் போய்விடும்.

கோவிந்தனுடைய மனைவி வெகு காலத்துக்கு முன்னரே இறந்துவிட்டாள். கோவிந்தன் தனது ஒரே மகளான வசந்தியை யாராவது ஒருவனுடைய கையில் பிடித்துக் கொடுத்து விட்டால், தனது மிகப் பெரிய பணி ஒன்று முடிந்து விடும் என்று எண்ணிக் கொண்டிருந்தான். இதைப் பற்றிச் சொக்கலிங்கத்திடமும் பல தடவைகள் சொல்லியிருக்கிறுன்.

ஒரு நாள் கோவிந்தன் காய்ச்சலோ கறுப்போ என்று சொல்லிப் படுத்து விட்டான். திடீரென்று தனக்கு ஒரு நல்லாங்கு பொல்லாங்கு நேர்ந்து விட்டால், வசந்தி தனித்துப்போவாளே- தவித்துப் போவாளே என்று ஏங்கினுன். இப்போதைக்கு அவளை ஒரு பெண்கள் விடுதியில் சேர்த்து விட்டால், தான் ஆஸ்பத்திரியிலாவது போய்ப் படுத்திருந்து நோயுடன் போராடலாம் என்று எண்ணினுன். தனது முடிவைச் சொக்கலிங்கத்துக்குச் சொல்லியனுப்பினுன்.

சொக்கலிங்கம் வீட்டுக்கு வந்து கோவிந்தனைப் பார்த்தார்; பிறகு வசந்தியையும் பார்த்தார்.

வசந்திக்குப் பதினுறு பதினெட்டு வயதிருக்கும். அங்க, உருவ அமைப்புகள் வஞ்சகமில்லாமல் வளர்ந்து, உருண்டு திரண்டு குளிர்ச்சியாக இருந்தன. கண்களில் ஒரு கவர்ச்சி குடியிருந்தது. முகத்தில் ஒரு மலர்ச்சி கொழுவிருந்தது.

சொக்கலிங்கம் பிரயாசைப்பட்டு வசந்தியை ஒரு விடுதியில் சேர்த்துவிட்டார். அதற்கான செலவையும் மாதா மாதம் செலுத்தி வந்தார். அனுதரவுப் பட்ட ஏழைகளுக்கு இத்தகைய உதவிகளைச் செய்வது தான் உலகத்திலேயே சிறந்த தர்மம் என்று சொக்கலிங்கம் தனது நெருங்கிய நண்பர்களிடம் சொல்லிக்கொண்டார்.

வசந்திதான் விடுதியில் நிம்மதியாக இருக்கிருளே, சொக்கலிங்கம் தான் எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளுகின்ருரே, தனது சுமை தான் நீங்கிப்போய்விட்டதே என்று அந்த அப்பாவி கோவிந்தன் எண்ணினுனே, என்னவோ! அவன் ஒரு நாள் சந்தோஷமாகச் செத்துப்போய்விட்டான்.

வசந்தியைப் பராமரிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் சொக்கலிங்கத்தின் தலையில் வந்து விடிந்தது. அதையிட்டுச் சொக்கலிங்கம் கொஞ்சமும்கவலைப் படவில்லை. முழு மனத்தோடு இதய பூர்வமாகச் செய்யும் தர்மமே மிகச் சிறந்த தர்மம் என்பதுதான் அவருடைய சித்தாந்தம் ஆயிற்றே!

வசந்தி தொடர்ந்துவிடுதியில்இருக்க முடியாதஒரு நெருக்கடிவந்தது. சொக்கலிங்கம் வசந்தியை அழைத்துப்போய் ஒரு நண்பரின் வீட்டில் விட்டு வைத்தார். அதிலும் சிலசங்கடங்கள் தோன்றின. இறுதியாக அவர் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து, அதில் வசந்தியை வாழவைத்து, வேண்டிய வசதிகளெல்லாம் செய்து கொடுத்து, அடிக்கடி போய்ப் பார்த்து வந்தார்.

இந்தச் சமுதாயத்தில் ஒரு காரியம் நடைபெற்ருல், அது சரியாக இருந்தாலும் தவருகஇருந்தாலும், அதற்குச் சாதகமாக நாலுபேரும் பாதகமாக நாலுபேரும் கிளம்பி, அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் கொஞ்சம் கொஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையைக் கரைத்துப் பூசி, ரகசியம் ரகசியமாகக் கதைத்துப் பேசி ரசித்துக் கொண்டிராவிட்டால், சிருஷ்டிகளுக்கெல்லாம் தலைமை தாங்கும் இந்த மனிதனுடைய மண்டை வெடித்துவிடும் என்று எப்பொழுதாவது. யாராவது, ஏதாவது சாபம் கொடுத்திருக்கிறார்களோ என்ற விபரம் சொக்கலிங்கத்துக்குத் தெரியாது.



சொக்கலிங்கத்தின் மனைவி மனோன்மணியின் காதுகளில் செய்திகள் சிறிது சிறிதாக விழ ஆரம்பித்தன. அவள் தனக்கு நம்பிக்கையான இரண்டொருவரை அனுப்பிப் 'புலன் விசாரணை' செய்வித்தாள்.

ஒரு நாள் சொக்கலிங்கம் வீட்டுக்கு வந்தபொழுது, மனோன்மனி கோடு கிழித்துக் கோட்டிலேநிறுத்தி அவரைக் கசக்கிப் பிழிந்து முறுக்கி உதறிப் போட்டுவிட்டாள்.

சொக்கலிங்கம் எத்தனையோ கதைகளைச் சொன்னார். எத்தனையோ காரணங்களைச் சொன்னார். எத்தனையோ சமாதானங்களைச் சொன்னார். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுபடவில்லை. முடிவாக அவர் துண்டை தோளில் போட்டுக்கொண்டு 'பரதேசம்' போய்விட்டார்.

இந்தச் சொக்கலிங்கத்தின் சம்சாரத்துக்கும் நமது திருநீலகண்டநாயனரின் 'சம்சார'த்துக்கும் ஏதாவது மும்மைத் துவந்தம் இருந்திருக்குமோ?

* * *

''பட்டணத்தார் என்ன பாடியிருக்கிறார், தெரியுமா?'' என்று சொக்கலிங்கம் என்னைக் கேட்டார்.

''தெரியாது'' என்று சொல்லிவிட்டு நாளைக் காலையில் இங்கிருந்து எப்படியாவது கண்டிக்குப் போய்விட்டால், அங்கிருந்து அனுராதபுரம் போய், வவுனியா போய் யாழ்ப்பாணம் போய் விடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். நான் எப்படியும் வருடப் பிறப்புக்கு முன்னர் வீட்டுக்குப்போக வேண்டுமே;

''பெண்களை உரித்துப் பிடுங்கி உண்மையை அப்பட்டமாகப் பாடியிருக்கிறார். சுருக்கமாக அவர் பெண்களை மாயப் பிசாசுகள் என்று சொல்லி விட்டார், போதுமா?'' என்று கேட்டார் சொக்கலிங்கம்.

''பட்டணத்தாரையும் அவருடைய காலத்தையும், நோக்கத்தையும், வாழ்க்கை முறையையும் அலசி ஆராய எனக்கு அறிவு போதாது. ஆனால்நான் அறிந்த வரையில் இரண்டு வகையானவர்கள் இன்றைக்குப் பெண்களைப் பொதுவாகத் திட்டிக்கொண்டிருக்கிறார்கள்'' என்றேன் நான்.

''யார் யார்?''

''ஒரு பெண்ணிடம் எதையாவது எதிர்பார்த்து ஏமாந்து போனவனும் திட்டுகிறான். ஒரு பெண்ணை ஏமாற்ற நினைத்து, அங்ஙனம் ஏமாற்ற முடியாமல் ஏமாந்து போனவனும் திட்டுகிறான். ஆனால் ஒருவன் தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக ஒரு சமுகத்தையே திட்டுவது சரியென்று எனக்குத் தோன்றவில்லை.''

சொக்கலிங்கம் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். சில நிமிடங்கள் எங்கள் மத்தியில் மௌனம் நிலவியது. பின்னர் அவரே, 'நமக்கு எதற்கு வீண் ஆராய்ச்சி. வாருங்கள் சாப்பிடலாம்' என்று எழுந்தார். எதிர்ப்படை பின் வாங்குவதால் தன் படை முன்னேறுகிறது என்பது சில சமயங்களில் சரியாக இருக்கலாம்.

உள்ளே மண்டபத்தில் ஒரு புற்பாய் போடப்பட்டிருந்தது. சொக்கலிங்கமும் நானும் அக்கம் பக்கமாக உட்கார்ந்தோம். ஒரு பத்து வயது மதிக்கத்தக்க சிறுமி தண்ணீர்ச் செம்பைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, எங்களுக்கு முன்னால் ஒவ்வொரு தலை வாழையிலையைப் போட்டாள்.

எனக்கு ஒரு சந்தேகம்.

ஊரில் உலகத்தில் ஒவ்வொருவனும் பிறரைப்பற்றிக் கவலைப்படாமல், தன் தன் நலம் கருதி எத்தனையோ காரியங்களைச் செய்துவிட்டுப் போகிறான். அதனால் பிறருக்கு நன்மையும் ஏற்படலாம், தீமையும் ஏற்படலாம். ஆனால்—

யேசுநாதருக்கும் பட்டணத்தாருக்கும் முடிச்சுப் போட்டு 'சாது' என்ற பட்டத்தால் போர்த்து மூடி வைத்துவிட்டால்—

மணலுக்குள் தலையைப் புதைத்துக் கொள்ளும் தீக்கோழி உலகத்தின் கண்களில் இருந்து மறைந்து விடுகின்றதா?

ஒரு இளம் பெண் சோற்றுப் பாத்திரத்துடன் வந்தாள். அவள் 'மூக்கும் முழி'யுமாக இருந்ததோடு சில தங்க நகைகளையும் அணிந்திருந்தாள். கழுத்தில் மாங்கல்யமும் இருந்தது.

எனது நெஞ்சில் ஓர் உண்மை 'பளிச்' சென்று தெரிந்தது. மனைவி மணி பிள்ளைகளுடன் எங்கே இருக்கிறாளோ? என்னென்ன துன்பங்களை அனுபவிக்கிறாளோ?

பாவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறப் பழமொழிகள்

எஸ். எம். கமாலுத்தீன்

அரபியில் ''மதல்'' என்பது மக்கள் வாழ்க்கையைச் சொல்லோவிய மாக்கித் தரும் பழமொழிகளும் உவமானங்களுமாகும். இவற்றிற்கான உவமைகள் பெரும்பாலும் விலங்கியற் றுறையிலிருந்தே பெறப்படுகின்றன.

கூரிய அவதான ஆற்றல் வாய்ந்த அரேபியர்கள் தம்மைச் சூழவுள்ள பொருட்களை அழகுற வருணிப்பதற்கு கருத்துச் செறிவும், ஒப்புமைப் பொருத் தமும் மிக்க பழமொழிகளை வழங்கி வந்துள்ளனர்.

இவ்வகையில் உலகிலுள்ள ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்களிடத்துக் காணப்படும் கற்பனை விழைவு போன்றே அரேபியரிடத்தும் வள மான கற்பனையார்வம் அமைந்துள்ள மைக்கு அவர்களிடையே தொன்று தொட்டு வழங்கிவந்துள்ள-இன்றும் வழங்கிவரும், பழமொழிகளும், உவ மான உவமேயங்களும் சான்றுபகர் கின்றன

இவ்வகையான, மொழிவளமூட்டும் பழமொழிகள், இன்றைய இளஞ்சந்த தியினரால்படிப்படியாக இழக்கப்பட்டு வரும் அவல நிலையை அரேபிய நாட் டில் அவதானித்த பேராசிரியர் (H. A. R. Gibb) அவர்கள் பின்வரு மாறு கூறுகிறார்கள்.

''அண்மைக் காலம் வரை அரபு மக்களிடையே எல்லாவிதமான உரை யாடல்களுக்கும், வாக்குவாதங்களுக் கும் சுவையூட்டுவனவாக இப்பழ மொழிகள் அமைந்துவந்தன உண வுக்கு உப்பு எத்தனை இன்றியமை யாததோ அதேபோல் உரையாட லுக்குப் பழமொழிகள் அத்தியாசியம் என்பது அரேபியரின் கருத்தாகும். ஆனால் நவீன கல்வி முறையின் தாக் கத்திற்கு இப்பழமொழிகள், கீழ் நாடு களில் மட்டுமல்ல மேல் நாடுகளிலும் கூட பெருமளவில் பலியாகிவிட்டுள் ளன. இன்றைய இளஞ் சந்ததியினர் தமது பெற்றோர் பேணிவந்த ஞாபக சக்தியை இழந்து வருவதோடு அச்சந் ததியின் பெறு பேறுகளுள் ஒன்றான வளமிகு பழமொழிகளைக் கையாளும் பழக்கத்தையும் இழந்து வருகின் றனர்.''

இனி, அரேபியாவில் வழங்கிவரும் பழமொழிகளில் சிலவற்றை கீழே காண்க.

1. ஒட்டகத்தைக் குடியமர்த்த நினைக்கிறவர்கள் வீட்டுவாசலை உயர் வானதாக அமைக்கவேண்டும்.

2. ஒட்டகம் தனது சொந்த முது குக் கூனலைக் காண்பதில்லை. ஆனால் தனது சகோதர ஒட்டகங்களின் கூன் முதுகுகளை மட்டும் காணத்தவறுவ தில்லை.

3. நீ காகத்தை உனது வழிகாட் டியாக்கிக்கொண்டால், அது செத்த நாய்களின் சடலங்களிடம் தான் உன்னை அழைத்துச் செல்லும்.

4. உள்ளத்தால் ஒன்றுபடுங்கள். ஆனால் உங்கள் கூடாரங்களை வெவ் வேறாகக் கட்டிக்கொள்ளுங்கள்.

5. ஒட்டகையோட்டிக்கு ஒரு நினைவு. ஆனால் ஒட்டகத்துக்கோ வேறொரு நினைவு.

6. அண்ணன் தம்பிபோல வாழுங் கள். ஆனால் கொடுக்கல் வாங்கலுக் குக் கணக்கு வைத்துக்கொள்ள மட்டும் மறந்துவிடாதீர்கள்.

7. ஈத்த மரங்கள் வளரும் நாட் டிலே, கழுதைகளுக்கும் ஈத்தப்பழங் களைத் தான் ஊட்டுவார்கள்.


8. நீதிபதியுடைய சவாரிக் கழுதை செத்தால் எல்லோரும் துக்கம் விசா ரிக்கப் போவார்கள். ஆனால் நீதிபதி மௌத்தானாலோ (மரணித்தாலோ) ஒருவருமே ''ஜனாஸா''வுக்குப் போக மாட்டார்கள்.

9. உள்ளே நுழையுமுன் வெளியே றும் வழியையும் பார்த்துக்கொள்ளுங் கள்.

10. ஆண்கள் உள்ளத்தளவு சிரிப் பார்கள். பெண்கள் சிரிப்போ உதட் டளவில் மட்டும்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாறுதல்கள்

அத்தியாயம் 2

## தெளிவத்தை ஜோசப்

### எழுதும் தொடர்கதை

"மூட்டை என்னுது தான்."

காரை நோக்கி ஓடிவந்த தலைவர் துரையின் கேள்விக்குப் பதில் கூறியபடி கம்பும் தடியுமாகஓடிவந்துகொண்டிருந்த கூட்டத்தைக்கையமர்த்தி நிறுத்தினார்.

"யார் இவர்கள்?"

"நம்ம ஆளுக தான்!"

"நம்ம ஆளுக தானா?"

"நம்மதோட்டத்து ஆளுகள் தான்"

"ஏன் கம்பும் கையுமாக ஓடியாறார்கள்...! பாம் படிக்கவா...?

"ஆமாம், பாம்பை அடிக்கத்தான். இரண்டு கால் நச்சுப் பாம்பை... அடித்துக் கொல்லத்தான்......"

கம்புடன் நின்ற ஒருவன் சற்றுப் பலமாக முனகுகின்றான்.

"கீழே ஆத்தோரத்துல நம்ம ஆளுகளோட சேனை இருக்கு தொரைகளே: அதுல நாட்டான்கனாட்டு எருமை மாடுகள் வந்து மிதிச்சு மேஞ்சு நாசமாக்கிப் போடுதுகள். கீழே மாடுகள் மேய்வதாக சேதி கெடைச்சிருக்கும். அதான் இவர்கள் ஓடி வந்திருக்கிறாங்க"

துரைக்குப் பதில் கூறிய தலைவர் காருக்குச் சற்று எட்டி நின்றுகொண்டிருந்தவர்களை நெருங்கி இறங்கிய குரலில் கேட்கின்றார், "நான் தான் துரைகிட்ட பேசுறதுக்காக நிக்கிறனே நீயெல்லாம்எதுக்காவ ஓடியாரே...கீழே சேனையில மாடு மேயுதாம்ஓடிப்போய் வெறட்டித் தொலையுங்க"என்று அவர்களை அனுப்பிவைத்து விட்டு துரையிடம் வந்து நிற்கின்றார்.

"மாடு வெரட்ட வந்தவர்கள் ஏன் தலைவரே கார்கிட்டே நிக்கணும்" தலைவர் கூறியதைத் தான் நம்பத் தயார் இல்லை என்பதைத் துரை நாசுக்காகக் காட்டிக்கொண்டார். "நாந்தானுங்களே அவர்களை நிப்பாட்டினேன்...... தொரை கவனிக்கலியா... இல்லாட்டி தொரை நிக்கிறதையும் கவனிக்காமெ தாறு மாறா ஓடுவான்கள்..."

தலைவர் திறமையாகச் சமாளித்தார். கூட்டமாய் நின்றவர்கள் நடந்து விட்ட பிறகு துரை கேட்டார் "இது என்ன தலைவரே மூட்டை ஏன் ரோட்டுல போட்டிருக்கே...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மூட்டையிலே புண்ணுக்கு... உங்க ளோட பேசணும் அதான் ரோட்டிலே போட்டேன்.''

துரையின் இரண்டு கேள்விகளுக் கும் தலைவர் லாவகமாகப் பதில் கூறி ஞர்.

துரைலேசாகச்சிரித்துக்கொண்டார் துரைக்கும் தலைவருக்கும் என்றுமே சண்டை வருவதில்லை இருவருமே காரியவாதிகள்.

''தலைவரே நான் யார் தெரியுமா? துரை... அதுவும் பெரியதுரை. உனக் குத் தெரியும் தானே...! நம்ம ஆளு களுக்கு நான் கெடுதல் செஞ்சி நீ கண் டிருக்கா... ''



தலைவர் குனிந்துகொள்ளுகின்ருர்.
''நீ பெரியதுரையை பாக்கணும்னு சொல்லி நான் மறுத்திருக்கா... என ளைக்காச்சும். இல்லே இல்லியா! பேசு தலைவரே......பேசு என்னைப் பாக்க ணும் என்னோட பேசனும்னு அதோ பாத்தியா எவ்வளவு பெரிசா ஆபீஸ் கட்டிப்போட்டிருக்கேன்... காருக்கு முன்னுக்கு மூட்டை போட்டு மறிச் சுத்தானு நீ என்னோட பேசணும்...''

தலைவருக்குப் பேச நா எழவில்லை. ''என்னை மன்னிச்சிடுங்க தொரைகளே ஆத்திரப்பட்டுட்டேன்...'' என்ற வாறு மூட்டையை ஓரத்துக்கிழுத் தார்.

''தட்ஸ் ஓகே... தலைவர் டேக் இட் ஈஸி... நீ செஞ்சது குத்தமுன்னு தெரிஞ்சு ஒத்துகிட்டா அது போதும். இப்பப் பேசுவோம்...... நீ என்ன கேக் கணும்.''

''காரே மேலே வரப்புடாதுன்னு இதோ பாருங்க இது புண்ணுக்கு மூட்டை இதை எப்படி நான் மேலே கொண்டாறது. இதைப்போல இன் னம் தேவைப்பட்ட சாமான்களை எப் படி மேலே கொண்டாறது...? ஆளுக எவ்வளவு கஷ்டப்படுது...''

''அதுக்காவ... கேட்காரனுக்கு லெஞ்சம் குடுத்து திருட்டுத்தனமா கார் கொண்டாருவேங்கிறியா. அது குத்தமில்லியா! என்னை எத்தனை தடவை கண்டு பேசியிருக்கே. இது பத்திக் கேட்டிருக்கியா. கேக்காட்டி எனக்கெப்படித் தெரியும்! சரி நீ நாளைக்கு ஆபீசுக்கு வா சொல்லித் தாறேன்'' என்றவர் சீட்டில் நிமிர்ந்து உட்கார்ந்து சுவீட்சைத் திருப்பினுர்.

''அப்ப சலாங்க...''

''சலாம் தலைவா'' என்று காரைக் கிளப்பிய துரை தலையை வெளியே நீட்டிக் கேட்டார் ''மூட்டை எப்படி மேலே போகும்?'' தலைவர் பதில் சொல்லத தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கையில் கொழுந்து லொறி மேலே வரும் ஓசை கேட்டது.

காரை ஓரத்துக்கெடுத்த துரை காருக்குப் பின்னுல் நிற்கும் லொறி டிரைவரிடம் மூட்டையைக் காட்டி ஏதோ மிக்ஞை செய்துவிட்டு காருள் மறைந்து கொண்டார்.

கார் மேல் வளைவுக்குள் மறைந் தது.

புண்ணுக்கு மூட்டை லொறிக்குள் மறைந்தது! பின் கதவில் குந்திஇருந்த சாக்காள் இருவருக்கும் வியப்புத்தாள வில்லை.

''என்னடா அதிசயமாருக்கு...... தலைவருட்டு மூட்டைன்னதும் லொறியா... !''

'காசையே காசுக்கு விப்பா னுகடா இவனுக...! நம்மளே யாருக்கு விப்பானுகளோ?''

அடுத்த நாள் தலைவர் துரையை ஆபீஸில் கண்டதன் பலன்—

'இந்தத் துண்டுடன் வரும் காரை மேலே விடு' என்று துரையின் கை யெழுத்திட்ட கடிதத்தைக் காட்டி கார் கள் கேட்டைத்தாண்டின. கீழே திரும் பிப் போகும்போது கடிதம் கேட்காரர் னிடம் கொடுக்கப்படவேண்டும். ...று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் காலை அத்தனை துண்டுகளும் ஆபீசில் பெரிய துரையின் பார்வைக்கு வந்துவிடும்.

அன்று சம்பள தினத்தின் பின் வந்த முதல் விடுமுறை நாள். கார்கள் ஒன்றன் பின் ஒன்றாய்க் கேட்டைத் தாண்டின. உட்காருவதும் எழுந்திருப்பதும் கேட்டைத் திறப்பதுமாக கேட்காரனுக்கு உடல் ஒடிந்தது. மூன்று மணிக்குள்ளாகப்பத்து'கேட் பாஸ்கள்' அவன் சட்டைப் பைக்குள் இருந்தன.

கேட்காரனிடம் முன்பு 'காசைக்' கொடுத்துவிட்டு உள்ளே வந்த கார்கள் இப்போது 'பாசைக்' கொடுத்துவிட்டு உள்ளே வரத் தொடங்கின. எதைக் கொடுத்துவிட்டு வந்தாலும் அய்யாவுக்கு நஷ்டம் நஷ்டம்தான்.

சும்மாகிடந்த சங்கைஅவர்தானே ஊதினர்!

கேட்டிடம் ஒரு கார் வந்து நின்றது. 'ப்ச்' என்று சோம்பலுடன் எழுந்து வந்த கேட்காரன் கையை நீட்டினன். நீட்டியகையில் 'பாசை' வைக்காமல் இரண்டு ரூபாய் 'காசை' வைத்தான் டிரைவர். கேட்காரன் திகைத்துப் போனன். காசை விடவும் மனமில்லை. காரை விடவும் மனமில்லை. காரை மேலே விட்டு ஒரு நேரத்தைப் போல் துரையிடம் மாட்டிக்கொண்டால்......!

பழைய கேட்காரனின் நினைவு மனதில் ஓடியது.

'கார் மேலே போகக் கார்காரனுக்கு ஒரு 'பாஸ்' வேண்டும்அவ்வளவு தானே......' சிறிது யோசித்தவன் தலையைப் பலமாக ஆட்டிக்கொண்டான். சட்டைப் பைக்குள் காசைப் போட்டுக் கொண்டவன் பைக்குள் இருந்து ஒரு 'பாசை' எடுத்து டிரைவரிடம் கொடுத்தான்.

கார் மேலே போயிற்று.

கேட்காரன் சிரித்துக்கொண்டான்.

'துரை பாய்க்கடியில் நுழைந்தால் நான் கோலத்துக்கடியிலேயே நுழைவேன்'

* * *

தோட்டத்தை ஒட்டி; தோட்டத்துக்கும் அப்பால்: தோட்டத்துக்குக் கீழே, என்றிருக்கும் கிராமங்களில் வசிக்கும் சிங்கள மக்களும் இதே அவதிக்குத்தான் ஆளானுர்கள். அவர்களும் கேட்டைத் தாண்டித்தானே உள்ளே வரவேண்டும்.

இவர்களுக்காவது இப்போது 'கேட் பாஸ்' கிடைக்கிறது. அவர்களுக்கு அதுதானும் இல்லை.

ஒரு சாகக்கிடக்கும் நோயாளியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோவது எப்படி?



இடுப்பு வலியால் துடிக்கும் வயிற்றுப் பிள்ளைக்காரியை பார்க்க ஒரு மருத்துவச்சியைக் கொண்டு வருவது எப்படி?

தோட்டத்து ஆஸ்பத்திரியும், மிட்வைபும் இவர்களுக்கு அப்பாற்பட்டவைகளாயிற்றே!

இந்த விதமான வேதனைகள், கொடுமைகள் இன்றைய உலகத்துக்குப் பொருத்தமில்லாதவை என்பதை சமுதாயத்தின் குருத்துக்களான இளைஞர்கள் சிந்திக்கத் தொடங்கினர். எலக்ஷன் வந்தது.

இளைஞர்கள் தேர்தல் பிரச்சாரவேலையில்ஈடுபட்டனர். பெரிய அளவில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடுகள் நடந்தன. துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவை எக்கச் சக்கமாக இடம் பெற்றன.

ஆளும் கட்சியைத் தாக்கும்சுலோகங்கள் ஆங்காங்கு எழுதப்பட்டிருந்தன. 'தோட்ட முதலாளிகளுக்கு சாத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமானஅரசு...முதலாளித்துவப் போக்குடைய அரசு... உழைக்கும் வர்க்கத்தை மதிக்காத அரசு...' என்பவையே பிரச்சாரக் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்களுடைய பேச்சாக இருந்தது.

தினசரி பேப்பரில் அடிபடும் பெரிய மனிதர்கள் பெயர்கள் பேச்சாளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தன.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசுவதற்காக, அதே தொகுதியில்



போட்டியிடும் அபேட்சகர், மற்றும் பேச்சாளர்களை ஏற்றிக்கொண்டு தன்னுடைய சிவப்பு நிறக் காரில் 'ஜம்' மென்று வந்தார்.

வீமனை மறித்த அனுமன் வாலாய், காரை மறித்துக்கொண்டு நின்றது கேட்.

கேட்டை உடைத்தெறியும் கோபம் வந்தது மந்திரிக்கு.

நான்யார் தெரிகிறதா?'' என்றார். வீமத்தொனியில்.

''யாராயிருந்தாலும் சரி... பாஸ் இருக்கா?'' என்றான் கேட் கீப்பர்.

''இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் நபர்களையே 'பாஸ் இருக்கா உள்ளே போக...' என்று கேட்டு விட்டானே! எலக்ஷனுக்கு அப்புறம் தானே அதெல்லாம் என்று நினைத்துவிட்டானோ!''

கார் கோபித்துக்கொண்டு போய் விட்டது. காரில் தான் மந்திரியும் இருக்கின்றார்.

கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் கேட்டை மறந்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதை எதையென்றுதான் அவர்களும் கவனிப்பார்கள்.

இந்தப் பொதுக்கூட்ட ஏற்பாடு களும் கல்யாண வீட்டு ஏற்பாடுகள் போல் தான். ஏதாவது ஒரு குறையில்லாமல் நடந்தது முடிந்தது என்ற பெயரே இடையாது.

பிரதம பேச்சாளர்களே பாதி வழியில் திரும்பிப் போக நேர்ந்துவிட்டது எவ்வளவு பெரிய குறை!

பேச்சாளர்கள் திரும்பிப் போய் விட்ட செய்தி கூட்டத்துக்கு எட்டியது. பெருந்திரளாகக் குழுமி நின்ற மக்கள் குழம்பினுர்கள்.


மூலைக்கு மூலை வித விதமான கோஷங்கள் எழுந்தன. வெள்ளைக்கார துரையை வாய்க்கு வந்தவாறு சிலர் திட்டினர்.

இன்றையக் கூட்டத்தில் பெரிய பேச்சாளர்கள் எல்லாம் பேசப்போகின்றனர். இன்னும் சற்று நேரத்தில் எல்லாரும் வந்துவிடுவார்கள். படத்தில் மட்டுமே பார்த்து திருப்திப் பட்டுக் கொண்ட நீங்கள் அவர்களை இன்னும் கொஞ்ச நேரத்தில் நேருக்கு நேராகப் பார்க்கப் போகின்றீர்கள் சினிமா நடிகர் சிறிவர்தனவும் பின்னணிப் பாடகி ரேசலினும் வருகின்றார்கள்.

தயவுசெய்து பொறுமையுடனும் அமைதியாகவும் இருக்கும் படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்''

அமைப்பாளர்களின் வேண்டுகோள் கூட்டத்தைச்சற்று அமைதிப் படுத்தியது.

**"தனிவை உப்பன்னே....**
**தனிவை மரென்னே—மே டிங்கதீ**
**எய் கோலம் நட்டன்னே —!"**



கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்களை சிலர் ஏசித்தீர்த்தனர்.

சிலர் நடக்கத் தொடங்கினர். பாட்டு பாடிக்கொண்டிருந்த 'மைக்' பேசத் தொடங்கியது.

''சகோதரர்களே, சகோதரிகளே, தாய்மார்களே, பெரியவர்களே, நமது

மைக் மறுபடியும் பாட்டு பாடத் தொடங்கியது.

கூட்டத்துக்கா; கூட்டத்தைக் கூட்டியவர்களுக்கா, கூட்டத்தில் பேச வருபவர்களுக்கா: பாட்டு யாருக்கென்று தெரியவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றில் நுழைந்த பாம்பு எட்டிப் பார்ப்பது போல், போனவேகத்தில் மீண்டும் வருகிறது சிவப்புக்கார். பின்னால் இன்னொரு காரும் வரவே கேட்காரன் பயந்து போனான், தன்னை அடித்து நொருக்கத்தான் ஆள் கூட்டிக்கொண்டு வருகின்றார்களோ என்று.

நல்ல வேளை அதற்குள்ளாக ஆபீசில் ஒருவன் துண்டு கொண்டு வந்தான், 'இரண்டு கார்களையும் மேலே அனுப்பு' என்று.

மாங்கிளையில் அணில் ஓடுவது போல் உயர்ந்த மலையின் மெலிந்த பாதையில்விரைவாகஓடும் கார்களையே பார்த்துக்கொண்டு நின்றான் கேட்கீப்பர்.

கரகோஷம் காற்றதிர்ந்தது, காது ஜவ்வை நைத்து விட்டது. "உழைத்துக் களைத்த என் தாய்மார்களே, பெரி



யோர்களே, நண்பர்களே, இவ்வளவு நேரம் காக்கவைத்துவிட்டோம், அதற்காக முதற்கண் தலைவணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகின்றேன், ஆனால் தவறு எங்களுடையது அல்ல,

உழைப்பவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும் முதலாளிமார்களுக்கு சலுகை செய்துகொடுக்கும்பிற்போக்கு அரசாங்கத்தின் தவறு! காற்றூதப்படும் பலூன்போல் செல்வத்தில் உயரும் சுரண்டும் வர்க்கத்துக்கு ஒத்தாசை பாடும் அரசியல் வாதிகளின் தவறு! தங்களுடைய உழைப்பின் முழுப் பயனையோ, அல்லது மதிப்பையோ உழைக்கும் உங்களுக்குத் தர மறுக்கும் தோட்ட முதலாளிமார்களின் தவறு!

இந்த பூமி யாருடையது? உங்களுடையது, நீங்கள் அனைவரும் இந்த ஸ்ரீலங்கா மண்ணின் குழந்தைகள், எங்கிருந்தோ வந்தவர்கள், ஒரு கேட்டைப் போட்டுக்கொண்டு இங்கிருக்கும் உங்களை உள்ளே நுழைய விடமாட்டேன் என்றால் அது யாரின் குற்றம்? உங்களிடம் ஓட்டு வாங்கி உங்களை மறந்துவிட்டு ஓட்டம் பிடித்த ஓர் வஞ்சகர்களின் குற்றம் அல்லவா! உங்களுடன் பேச; உண்மை நிலையை உங்களுக்கு எடுத்துக் கூற; ஓடி வந்த உங்கள் தோழர்களாகிய எங்களை கேட்டைத் திறந்து விடாமல் திருப்பி அனுப்பி இரண்டுமணிநேரம் தாமதிக்கச்செய்து அதனால் உங்களை இரண்டு மணிநேரம் காக்க வைத்தது யாருடைய குற்றம்? நீங்களே கூறுங்கள் தாய்மார்களே எங்களுடைய குற்றமா?"

முன் வரிசைப் பெண்கள் 'இல்லை' என்பதற்கடையாளமாகத் தலையை ஆட்டிக்கொண்டனர்.

பேசியவர், பானம் அருந்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார்,

"இந்த ஏழைத் தாய்க்குக் கடுமையான காய்ச்சல் வந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம், அரசாங்க ஆசுபத்திரி பதுளையில் இருக்கிறது. இங்கிருந்து பதினாலு மைல் தொலைவில், இந்தத் தாய் மருந்தெடுப்பது எப்படி?

பட்டணத்தில் உள்ளவர்களுக்கு செய்து கொடுக்கும் வசதியில் நூற்றில் ஒன்றையாவது கிராமத்து மக்களாகிய உங்களுக்கு இவ்வரசாங்கம் செய்து கொடுத்ததா?

நாங்கள் கேட்டிடம் தடுக்கப்பட்டபோதே அந்தக்கேட்டைஉடைத்தெறியும் ஆத்திரம்எங்களுக்கு வந்தது 'நாங்கள் தடுக்கப்பட்டோமே' என்பதால் எழுந்ததல்ல அந்த ஆத்திரம். எங்கள் வருகைக்காக இரத்தத்தை வியர்வையாக்கும் நீங்கள் இங்கு காத்து நிற்பீர்களே என்ற அனுதாபத்தால் எழுந்த ஆவேசம் அது. உள்ளே இருக்கும் எமது தோழர்கள் இது போல் எத்தனை தடவை தடுத்து நிறுத்தப்பட்டிருப்பார்கள் என்னும் கோபத்தால் எழுந்த குமுறல் அது.

முதலாளி வர்க்கத்தைக் காப்பாற்றுவதற்காக உங்களையும் உங்களது உழைப்பையும் சூறையாடும் அரசாங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தால் இவைகளை உணர முடியாது! இந்த 'கேட்டை'. இல்லாமல் செய்து அன்றாட அடிப்படைத் தேவைகளில் ஒன்றான போக்குவரத்து வசதியை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கஅரசாங்கத்தால் முடியாதா? அவர்கள் அதைப் பற்றி நினைத்தார்களா? இல்லை! ஏன்...

தோட்ட முதலாளிகளின் நல்லுறவைக் கெடுத்துக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை, அதற்காக உங்களைப் பலியிடுகிறார்கள்,

என்னதான் பிரயத்தனப்பட்டாலும் அவர்களுடைய ஜம்பம் இனி செல்லாது. உழைக்கும் வகுப்பார்உண்மையைக் கண்டுகொண்டனர். உங்களுடைய சக்தி உங்களுக்குத்தெரியாது, அது மிகவும் மகத்தானது. அதை எதிர்த்து நிற்க எந்தச் சக்தியாலும் முடியாது,


மனித வாழ்க்கையில் மாறுதல்கள் நடந்து கொண்டே இருக்கவேண்டும். தன் பிழைப்புக்காக விலங்குகளை எதிர்த்தும் இயற்கையை எதிர்த்தும் போராடிய ஆதி மனிதன் நாடோடியாக இருந்து விவசாயியாக மாறுதல் பெற்றான், விவசாயம் முதலில் தோன்றியபோது மனிதனுடைய வாழ்க்கையில் பெரும் மாறுதல் உண்டாயிற்று. வேட்டையாடிக்கொண்டு திரிந்தவர்கள் ஒரு இடத்தில் வாழத்தலைப்பட்டனர்: கிராமங்களும்நகரங்களும் தோன்றின, விவசாயம்வளரசெல்வம் வளர்ந்தது, ஜனத்தொகை பெருகிற்று, கலைகளும்கைத்தொழில்களும் தோன்றின. உற்பத்தி முறையில் தோன்றிய மாறுதலால் சமூக வாழ்க்கையே மாறியதற்கு உதாரணம் தொழில் புரட்சி, தொழில் புரட்சியின்போது உற்பத்திக்காக யந்திரம் புகுத்தப்பட்டது. உற்பத்தி முறைகள் மாறவே பொருளியல் அமைப்பு மாறுகிறது, பொருளியல் அமைப்பு மாறவே மக்களின் கருத்தும் சட்டங்களும், அரசியலும் மாறுகின்றன,

சரித்திரம் நமக்குச் சமூகத்தின் மாறுதல்களையே காட்டுகின்றது. உழைக்கும் வர்க்கத்தின் வளர்ச்சியாலும், போராட்டங்களினாலுமே சமூக மாறுதல்கள் நடைபெறுகின்றன, இப்போதிருக்கும் நிலையில் இருந்து ஒரு மாறுதல் நமக்குமிகவும் அத்தியாவசியமாகப் படுகிறது,

தேயிலைத் தோட்டங்களில் உழைப்பவர்கள் யார்? இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள், கேட்டுக்குள்ளே கார் கொண்டுபோர அவர்களுக்குப் பாஸ் உண்டு, வியாதிக்கு மருந்து போட உள்ளேயே ஆஸ்பத்திரி உண்டு. அவர்கள் பிள்ளைக்கு பள்ளிக்கூடம் உண்டு, ரேஷன் அரிசி உண்டு, மாவு உண்டு, எல்லா வசதிகளும் உண்டு ஆனால் இந்த மண்ணின் மக்களாகிய உங்களுக்கு இதில் எது உண்டு?

இந்த அக்கிரமங்கள் அழிய, அநியாயங்கள் புதை பட உங்களுடைய ஓட்டுக்களை எங்களுக்கே போட்டு அவர்களை மண் கவ்வச்செய்யுங்கள்,

உங்களுடைய ஓட்டெல்லாம் எங்களுக்கேதான் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை. எங்களுடைய புதுவருட



அலுவல்களில் முதலாவது அடைபட்டிருக்கும் இந்த கேட்டை உடைத்து உங்களுக்கு ஒரு பஸ் போடுவது. இதை நாங்கள் செய்யத் தவறினால்...''

அவர் பேச்சை முடித்துக்கொண்டார். கைதட்டல் ஓய நீண்ட நேரம் பிடித்தது.

தோட்டத்து மக்களின் அவல வாழ்வு அகிலம் அறிந்த ஒன்று. அவர்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்பட்டதே அரசியல் அனுதைகளாக்கத்தான். சகல விதமான மனித உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ள பரிதாபத்துக்குரிய தோட்டமக்கள் சுற்றியுள்ள கிராமத்து சிங்கள மக்களை விட வசதியாக வாழ்வதாகத் துர்ப்பிரச்சாரம் செய்வது பதவி மோகம்கொண்ட அரசியல்வாதிகளின் தீராத விளையாட்டு.

தமிழ் மக்களைப் பற்றிப் பேசி, சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தங்களு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய நலனுக்காகச் சுரண்டிக் கொள்ளும் இவர்கள், பட்டாளிகளின் உழைபைச் சுரண்டி நல்வாழ்வு பெறும் முதலாளிகளை விடவும் மகாக்கொடியவர்கள்.

''புரட்சி, போராட்டம்'' என்று தனக்குத் தெரிந்த சினிமா வசனம் சிலவற்றைப் பேசி முடித்தார் சினிமா நடிகர். 'ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே, என்று பாடிக் காட்டியதுடன் மேடைக்குக் கவர்ச்சி தேடிக் கொடுத்தார் பின்னணிப் பாடகி.

இப்போதெலலாம் தான் தேர்தல் கூட்டங்களுக்குத் திரை நடிகர்கள் வருவது ஒரு பேஷனுயிற்றே!

கணத்துக்குக் கணம் கைதட்டல் ஒரு அரசியல் பேச்சாளிக்குக் கிடைக்கிறதென்றல் குழுமி இருக்கும் அப்பாவி மக்களின் உணர்ச்சி கணத்துக்குக் கணம் களவாடப் படுகிறது என்பது உறுதி.

அன்றையக் கூட்டத்தில் பேசிய அத்தனை பேருக்கும் கை தட்டலில் குறைவே இல்லை.

*  *  *

பல மாதங்களின் பின் அன்று அந்தத் தோட்டத்துப் பாதையில் பஸ் ஓடியது.

அன்றைய தினம் பார்க்கவேண்டுமே! ஆடிப்பூசை ஆர்ப்பாட்டம் தான்.

மாலையும் தானுமாக மணப் பெண்போல் வந்தது பஸ்.

மாலையும் கழுத்துமாக மாப்பிள்ளை போல் முன் சீட்டில் அமர்ந்திருந்தார் மந்திரி. மங்கம்மா சபதம் போல் மந்திரியின் சபதமும் நிறைவேறிவிட்டது.

கேட்காரனின் சுகமான உத்தியோகம் பறிபோய் விட்டதைப் பற்றி மந்திரி கவலைப்படமாட்டார். அவன் ஓட்டில்லாத பிரஜை.

லயத்து ஓரங்களில், பாதையோர வாங்கி விளிம்பில்; பாலத்தின் பைப் புக்களில் ஆட்கள் கூட்டம் கூட்டமாய் நின்று வேடிக்கை பார்த்தனர். பசறை ரதம் பார்ப்போது போல்.

பாதையோர மலையில் முருக்கை வெட்டிக்கொண்டிருந்தவர்கள் கத்தியும் கையுமாகப் பாதைக்கு இறங்கி விட்டனர் பஸ் பார்க்க.

வேடிக்கை பார்ப்பதே ஒரு மனித பலவீனம்!

அதோ ஆபீஸ் விராந்தையில் அப்போதே பிடித்து நிற்கின்றரே பெரிய வர்-தனக்கேற்பட்ட இழப்பையும் மறந்து—அதுவும் பஸ் பார்க்கத்தான்.

நீட்டிக் கொண்டிருக்கும் பாதையோரத் தேயிலை வாதுகளை இத்தனை நாட்களாகத் தோட்டத்து லொறி உரசியது. இப்போது இ. போ. ச. பஸ்சும் உரசுகிறது.

பதவி ஏற்றிருக்கும் புது அரசாங்கத்துக்குத் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளு முகமாகவும் மந்திரியின் வெற்றியைப் பாராட்டு முகமாகவும் ஒரு பாராட்டுக் கூட்டம் ஏற்பாடாகி இருந்தது.

முந்திய கூட்டத்தை ஒழுங்கு செய்த அதே இளைஞர்களால் ஏற்பாடாகி இருந்த பாராட்டுக் கூட்டத்துக்கு மந்திரி பஸ்ஸிலேயே வந்தது இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

கேட்டுடைத்த சாதனையால் ஏற்பட்ட எத்தனையோ நன்மைகளில் முக்கியமானது இரண்டு.

அடுத்த தேர்தலிலும் வெற்றி இவருக்கே தான் என்பது ஒன்று.

தோட்டத்துப் பிள்ளைகளில் சிலர் பதுளைப் பள்ளிக்கூடத்துக்கு பஸ் ஏறிப் போகின்றர்கள் என்பது மற்றது.

''பொட்டைப் புள்ளையாய் இருந்தாலும் பரவாயில்லே, நாலெழுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படிச்சுட்டுப் போகட்டும்' என்ற நினைப்பில் பெரிய கங்காணி துணிந்து தனது மகளைப் பட்டணத்துப் பெண்கள் பாடசாலையில் சேர்த்து விட்டார்.

பஸ்சுக்கு சீசன் டிக்கட் எடுத்துக் கொடுத்ததுடன், மகளுடன் போய் வரச் சின்னானின் மகனையும் ஏற்பாடு செய்து கொண்டார்.

சின்ன சூட்கேஸ், டிபன் கேரியர், பிளாஸ்டிக் பை சகிதம் அரைக்கால் சட்டையும் வெறுங்காலுமாக நடக்கிறானே அவன் தான் சின்னானின் முதல் மகன் ராமர்.

வெள்ளைக்கவுனும் வெள்ளை மேஸ் சப்பாத்துமாக பெரிய கங்காணியின் மகள் சீதை தன்னைவிட இரண்டுவயது பெரியவனான ராமருடன் பட்டணத்துப் பள்ளிக் கூடத்துக்குப் பஸ்ஸில் போகத் தொடங்கி விட்டாள் மூன்றாம் வகுப்புப் புத்தகங்களுடன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோவசியமும் நனவிலி நிலையும்

சபா ஜெயராசா

### தோற்றுவாய்:

1.0 உள்ளம் அல்லது மனம்பற்றி நிகழ்ந்த ஆய்வுகள் புதிய திசைகளை நோக்கிச் சென்றபொழுது, வியப் பளிக்கக்கூடிய, புதிய முடிவுகளை எடுத்தற்குத் தேவையான சான்று களைக் கொடுத்தன. உள ஆய்வின் தந்தையெனக் கருதப்படும் பிராய்டு (Freud) ஆரம்பத்தில் மனத்தை இரு கூறுகளாகப் பிரித்து ஆய்வினை மேற் கொண்டார்.

1.1 அவர் கருதிய முதலாவது பிரிவு "ஈகோ" (Ego) எனப்பட்டது. இது மனத்தின் நனவுப் பகுதியாகும். விழிப்புள்ளதும், தருக்கப் பண்பு கொண்டதும், பண்பட்டதுமாகிய 'மேல்' நிலையினை இது கொண்டுள்ளது.

1.2 இரண்டாவது பிரிவு "இட்" (ID) எனப்பட்டது. இது விழிப்புக் குன்றியதும், தருக்கப்பண்பற்றதும், நனவற்றதுமான பகுதியாகும்.

### மனோவசிய நித்திரை:

2.0 ஆனால் மனோவசியம், அல்லது கருத்தேற்ற நித்திரை (Hypnosis) உள்ளத்தின் புதியதொரு பிரிவினுக்கு இட்டுச் செல்லுவதாகவும் அப்பிரி வினைச் சுட்டிக் காட்டுவதாகவும், அமைந்தது மனோவசிய நித்திரை என்பது ஒருவரைப் படிப்படியாகக் கருத் தேற்ற உச்ச நிலைக்கு அழைத்துச் சென்று, மனத்துள் எண்ணங்களைத் தடுத்தும், அடக்கியும் வைக்கும் தடை களை எடுத்துவிடுவதாகும். இத்தகைய உத்தி முதலில் பிரான்சு நாட்டு உள வியலாளர்களினால் பெரிதும் பரீட்சிக் கப்பட்டுவந்ததாகும்.

2.1 கருத்தேற்ற நித்திரை விட் டெழுந்தவரை, கருத்தேற்ற நிலையில் அவர் நடந்துகொண்ட விதம் பற்றி வினவிய பொழுது, யாதும் அறியாத வராகவும், தமக்கு இடப்பட்ட கட் டளைகளை மறந்தவர்களாகவும், காணப் பட்டார்கள்.

2.2 கருத்தேற்ற நித்திரையினை நல் வழியில் கையாளும் பொழுது, மிகச் சிறந்த பலன்கள் ஏற்படுவதுடன், மனத்தாக்கம் காரணமாக ஏற்பட்ட பிணிகளையும் குணப்படுத்தக் கூடியதா கவும் அமைகின்றது. எடுத்துக்காட் டாக, உளவியல் தாக்கத்தின் கார ணமாக கால் வழங்காத ஒருவரைக் கருத்தேற்ற நித்திரைக்குக் கொண்டு வந்து "இதோ உமது கால் உணர்ச் சியைப் பெறுகின்றது. உணர்ச்சியி னால் கால்கள் வியர்க்கின்றன. கால் களை மெதுவாக அசைக்கின்றீர், கால் விரல்களை இலேசாக ஆட்டுகின்றீர்" என்று கூறும்பொழுது அவரது கால் கள் உணர்ச்சி பெற்று வழங்கத் தொடங்குகின்றன இதனை உபயோ கித்து எதிர்மாறான செயல்களில் ஈடு படுதல் பயங்கரமானதும், மனிதாபி மான மற்றதுமான செயலாகும்.

2.3 இறந்த காலங்களில் நிகழ்ந்த அதிர்ச்சியான, பயங்கரமான, நினைவு கள் மறக்கப்படாமல் மனத்திலே புதைந்துகிடக்கின்றன. கருத்தேற்ற நித்திரையில் அப்பயங்கர நிகழ்ச்சி யினை நினைவில் கொண்டுவந்து, உளப் பிணிக்குப் பரிகாரம் தேடமுடியும்.

இத்தகைய கண்டுபிடிப்புக்கள் மனம் அல்லது உள்ளத்தின் கண் ணுள்ள புதியதொரு கண்டத்தினைத் திறந்து காட்டுவதாக அமைந்தன. கருத்தேற்ற நித்திரை அல்லது மனோ வசியம் காரணமாகப் பின்வரும் தக வல்கள் தெளிவு பெறலாயின.

3.1 சிலகுறித்த நிகழ்ச்சிகள் நினைவை விட்டு நீங்காது எங்கோ பதிவு செய்து வைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.2 தடுக்கப்பட்ட, அல்லது அமுக்கப்பட்ட எண்ணங்கள் விறுவிறுப்பாகவும், திறமையுடனும், மனத்தின் ஒரு பகுதியிலே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

## நனவடி நிலை:

4.0 இத்தகைய உண்மைகள் உள்ளத்தின் புதியதோர் பகுதியை உணர்த்து பவையாக அமைந்தன. இத்துறையில் ஆய்வினை மேற்கொண்ட பிராய்டு அவ்வுளப் பிரிவிற்கு மேலான ஈகோ (Super Ego) எனப் பெயரிட்டார். வேறு பல ஆராய்ச்சியாளர்கள் அப்பிரிவினுக்கு நனவடி நிலை நினைவுகள் ' (Subconscious Memory) எனப் பெயரிட்டார்கள். இவ்விடு குறிப் பெயர்வைப்பிலே சிக்கல்கள் இருந்தாலும், உள்ளத்தில் அமுக்கப்பட்ட உணர்ச்சிகளைத் தேக்கிவைக்கும் சில குறித்த தன்மைகளைக் கொண்ட பகுதியொன்று உளதென்பது நிரூபணமாகியது.

4.1 மனிதனது நடத்தையும் உணர்ச்சிகளும், முன்னைய நிகழ்ச்சிகளினாலும், தன்னனுபவங்களினாலும், பாதிக்கப் படுகின்றனவென்றும் ஆனால் அந் நிகழ்ச்சியினை அவனால் இலகுவில் வெளிப்படுத்தமுடியாதெனவும் அறியப்பட்டது. ஆனால் அவைகள் கருத்தேற்ற நித்திரையில் ஒருவரால் வெளிப்படுத்தப்படுகின்றனஅத்தகைய உணர்ச்சிகள் தேங்கி நிற்கும், அல்லது அடைபட்டுக் கிடக்கும் பகுதியே நனவடி நிலையென்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இக்கண்டு பிடிப்பு உளவியலில் புதியதொரு திருப பத்தினை ஏற்படுத்தியது

## அமுக்கப்பட்ட உணர்ச்சிகள்:

5.0 குழந்தைகள் மீது பெரியோர்கள் செலுத்தும் ஆக்கிரமிப்புக்கள்— அவர்கள் மீது திணிக்கின்ற வலிய கட்டுப்பாடுகள், அவர்களின் மனத்திலே எதிர்ப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றது. எதிர்ப்புணர்ச்சி கட்டுப்படுத்தமுடியாத உளவெழுச்சியாகும். எனவே இறுக்கமான கட்டுப்பாட்டினுள்ளும், வலிய ஒழுக்கநெறிப் பிடியிலும் வளரும் குழந்தைகளின் மனத்தில் எதர்ப்புணர்சி அமுக்கவும், நசுக்கவும் படும்பொழுது, மனநோய்க்குச் சாதகமான நிலை உருவாகின்றது.

5.1 பிராய்டினுடைய கொள்கையின்படி, இவ்வாறு அமுக்கப்படும் உணர்ச்சிகளே நனவடி நிலை அல்லது மேலான ஈகோ (Super Ego) தோன்றுவதற்குரிய கருவாக அமைந்து விடுகின்றது.

5.2 இக்கருத்தினுற் போலும் பிராய்டு உளப்பிணியுள்ளவர்களின் குழந்தை, இளமைப் பருவ வாழ்க்கை ஆராயப்படவேண்டுமென்பதை வலியுறுத்தினர்.

5.3 எனவே குழந்தைப் பருவத்தில் அடிப்படைத் தேவைகள், இயல்பூக்கத் தேவைகள், ஆகியவற்றை நிறைவு செய்தல் அத்தியாவசியமானதும், இன்றியமையாததுமாகும். உரியபருவத்தில் அவை நிறைவேற்றப்படாவிடில், சங்கிலித் தொடர்போல நனவடி நிலையில் மறைந்தும், புதைந்தும், நசுங்கியும் கிடந்து, உளப்பிணியை அளிக்கும் ஏதுவாகமாறும்.

5.4 ஆனல் அடிப்படைத் தேவைகளைநிறைவேற்றும்விடயத்தில்பிராய்டு பாலியல் தேவைக்கு முக்கியமும், முதலிடமும் அளித்தது, பின் வந்த ஆய்வாளர்களினல் கண்டிக்கப்படுகின்றது.

## ஓர் உதாரணம்:

6.0 உள்ளத்தின் பாகுபாடுகளைப் பின்வரும் உதாரணத்தின் மூலம் எளிதான வகையில் விளக்க முடியும். இருண்ட ஒரு மண்டபத்தின் மத்தியில் ஓர் ஒளிவீசும் தீபம் வைக்கப் படுகின்றது.

6.1 தீபத்திற்கு அண்மையிலுள்ள பகுதியில் ஒளிமிகத் தெளிவாக விழுகின்றது. அப்பகுதியிலுள்ள பொருட்கள் ஒளியில் தெளிவாகத் தெரிகின்றன. இதனை மனத்தின் நனவு நிலைக்கு ஒப்பிடலாம்.

6.2 சில பகுதிகளில் ஒளி அரைகுறையாக விழுகின்றது. இதனை நனவடி நிலைக்கு ஒப்பிடலாம்.

6.3 சில விடங்கள் ஒளி பெருது இருண்டு கிடக்கின்றன. இதனை நனவற்ற அல்லது நனவிலி நிலைக்கு ஒப்பிடமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலைகள்

சீ.சாத்தனர்

இருவர்,
விலங்கிணைத்த கைகள்,
விடுதலைக்காய்ச் சீறியெழும்
பலம் படைத்த முகங்கள்!
திரள் தோள்கள்,
பார்ப்பதற்கே மனம் திமிறும்
படைப்பு!

இவ்விருவர்,
இவ்வுலகின் வீரர்,
எதிர்காலம் தொழுதேத்தும் மனிதர்.
பாழ்விதியை உடைத்திடவே வந்திட்டதீரர்!
இவர்களே,
நம் குலத்து மனிதருக்கு ஒளிகள்;
நாளைதனை ச்சிறக்க வந்த தலைவர்!

இருவர்,
பார்ப்பதற்கே மனம் திமிறும்
சிலைகள்!...... இவர்கள்
உலகதினில் இன்று
உலவுகின்ற மனிதர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"என்னை நல்லாப்பாருங்கோ... பார்க்கச் சொல்லுறன். கவனமாய்ப் பாருங்கோ... என்னைப் பார்க்க ஆர் மாதிரியிருக்குது? ஏன் யோசிக்கிறீங்கள்? நீங்க சி. ஐ. டி. 686 என்ற படம் பார்க்கவில்லையோ? பார்த்தனீங்கள். எனக்குத் தெரியும். எனக்கு வயது கொஞ்சங்குறைவு தான். அதாலைதான் மீசை இன்னும் கறுத்து வளரேல்லை. ஒருக்கால் மீசை வழிச்சனான்...ஏன் இப்ப சிரிக்கிறீங்கள்...ஓ ஓ... எனக்கு உயரங்காணாதெண்டா நினைக்கிறீங்கள்...? எனக்கு இப்ப பதினெட்டு வயது முடிஞ்சிருக்குது. இருபத்தி ஐந்து வயதுக்குள்ளை நானும் ஜெயச் சந்திரன் மாதிரி வந்திடுவன். அடடே, சொல்லவந்த விஷயத்தை மறந்திட்டன். என்னைப் பார்க்கிற எல்லாரும் அச்சுரிச்சு ஜெயச்சந்திரன் மாதிரியே இருக்கிறாய் எண்டு தான் சொல்லுகினை...என்ரை பேரும் சந்திரலிங்கம். நான் படத்திலை நடிக்கப்போன உடனை பேரையும் சுருக்கி சந்திரன் எண்டு மாத்திப்போடுவன்"

அவன்—சந்திரலிங்கம் என்னைக் கவனிக்காமலே வளவளவென்று கதைத்துக்கொண்டு நிற்கின்றான். என்னையும் "அவனையும்" போவோர் வருவோரெல்லாம் ஒரு மாதிரிப்பார்த்துக் கொண்டு செல்வதை அவதானித்த நான், எப்போதடா இவனிடமிருந்து கழரலாம் என என்னுள்ளாக நினைத்து அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றேன்.

நான், கிராமத்திற்கும் பட்டினத்திற்கும் இடை நிலையிலுள்ள இவ்வூரில் ஆசிரியனாக நியமனம் பெற்று மூன்று மாதங்களே ஆகின்றன. பள்ளிக்கூடத்திலிருந்து ஐந்து மைல்கள் தள்ளியுள்ள சிறுபட்டினத்திலிருந்தே நான் தினசரி பஸ் மூலம் பள்ளிக்கூடத்திற்குச் சென்று வருகின்றேன்.

பள்ளிக்கூடத்திலிருந்து சிறிது தள்ளி பஸ் நிற்குமிடமிருக்கின்றது. ஆனந்தபவான் என்ற சிறிய தேனீர்க் கடைக்கு முன்னதாகவே, இங்கே பஸ் நிறுத்தப்படும் எனவிளக்கும் ஆச்சரியக் குறியிடப்பட்ட பஸ்படமுள்ள கட்டை நிற்கிறது. தேனீர்க் கடையின் முன்புறம் சிறிய தாழ்வாரம். ஒரு மருங்கிலே தனி வாங்கு. அந்த வாங்கிலே உடலிற்களைப்போடும், கையில் புத்தகங்களோடும் குருநாதன் போல நான் இருக்கிறேன். என்னெதிரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நிற்கிறான்; கதையாக, சொற்களாக நிற்கின்றான்.

நேற்று இதே நேரம், இதே வாங்கில் நான் இருந்தபோது இவன் அவ்வழியே வந்தான். என்னைப் பார்த்து மரியாதையான பல் தெரியும் சிரிப்புச் சிரித்தான். அந்தச் சிரிப்பு நிரந்தரமாக முகத்திலே ஒட்டி வைத்தாற்போல இருந்தது. பிறகு தான் தெரிந்தது, அவனுக்கு இயல்பிலேயே சிரிக்கும் பற்கள், அதாவது மிதப்பான பற்கள்,

நான் இப்பகுதிக்குப் புதிய ஆசிரியன். என் பள்ளிக்கூடத்திலே பல நூறு மாணவர்கள். அவர்களிலே பலரை எனக்குத் தெரியாமலிருக்கலாம். அத்தகையவர்களில் இவனும் ஒருவனாக இருக்கலாம் என்று நினைத்தேன்.

அவனது சிரிப்பினை ஏற்று நானும் புன்னகைத்தேன்.

பதிலாக அவன் கேட்டான்-

''என்னைத் தெரியுமா?''

எனக்கு ஏனடா சிரித்தோமென்றாகிவிட்டது. சமாளித்துக்கொண்டேன்.

"கண்ட ஞாபகம்''

''ஆ...அப்படித்தான் இருக்கும்... என்னைப்போலை வேறை யாரவேனை நீங்க கண்டிருக்கிறீங்களா? என்னை நல்லாப்பாருங்க... நீங்க படம் பார்க்கிறதில்லையோ?''

உணர்ந்துகொண்டேன் நான் இப்போது ஒரு சங்கடத்தினுள் சிக்குப்பட்டுவிட்டதாக. அவனோ என் முகத்தினை, ஆவலோடு, வெகு ஆவேசமான ஆவலோடு துருவிக்கொண்டிருக்கின்றான். என் வார்த்தைகளுக்காக அவன் காத்திருந்தான். எனக்கோ பதிலே சொல்லத்தோன்றவில்லை.

அவ்வேளையில், என் இக்கட்டான நிலையிலிருந்து என்னை மீட்க வருகிறாற்போல பஸ்வந்து என்னை ஏற்றிச்சென்றது.

இன்றோ மீண்டும் என் முன் அவன்.

ஆனால் நேற்றைய விட இன்று எனக்கு அவனது கதைகள் திகைப்பைத் தரவில்லை. அவனைப்பற்றி அறியவேண்டுமென்ற எண்ணம் நெஞ்சினுள்ளே முனைப்பெடுத்திருந்தது.

''ஏன் நீர் தொடர்ந்து படிக்கயில்லை''

நானே கேட்டேன். அவன், தன்னுடைய நெற்றியிலே கும்பியாக விழும் தலைமயிரை இடதுகை ஆட்காட்டிவிரலால் லேசாகத் தட்டிக் கொண்டான்.

"எனக்குப் படிச்சு உத்தியோகம் பார்க்க விருப்பமில்லை. படிச்சும் என்ன பிரயோசனம்? என்றை அக்காவும் படிச்சா. எஸ். எஸ். ஸி. கூடத்திறமாத்தான் பாஸ் பண்ணினா. ஆனால் இப்ப வீட்டிலை சும்மா இருக்கிறா...''

அவன் பேச்சிலே திடீரென்று தொய்வு ஏற்பட்டது.

''நான் அக்கா போலை இல்லை. அக்கா நல்ல கெட்டிக்காரி. எனக்கு எதிலையும் மறதி வந்திடுது. ஆறும் வகுப்புக்கு மேலை படிப்பு ஓடவே யில்லை, நிண்டிட்டன்''

நான் உட்கார்ந்திருந்த வாங்கோரமாக உள்ள தடியிலே பூசிக் காய்ந்த சுண்ணாம்பைச் சுரண்டிக்கொண்டே அவன் மௌனமாகி நிற்கின்றான். யோசனைகள். பழையகால நினைவுகளை அகழ்ந்து தோண்டும் மனதை அச்சிட்ட முகம்.

நான் அவனது முகத்தினைக் கூர்ந்து பார்த்தேன். வட்டமானமுகம். குவிந்து முன்நெற்றியிலே புரளும் கேசம். மிதப்பான பற்கள். நாடியின் இடது புறத்தில் சிறிய கறுப்பு மச்சம். பத்தொன்பது வயது இளைஞனுக்கேயுரிய பொலிந்த, களையான தோற்றம். மெல்லிய பச்சைச்சேர்ட்டும், சறமும் அணிந்திருந்தான்.

''நல்லாப் படிச்சால்தான் படம் நடிக்கிறதுக்குச் சேர்ப்பாங்களா? நீங்க எனக்காகச் சொல்லவேணும்...உண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையைச் சொல்லுங்க. ஆறு மட்டும் படிச்சால் போதாதோ? உங்களுக்கு ஜெயச்சந்திரன் எத்தினையாம் வகுப்பு வரை படிச்சவர் எண்டு தெரியுமோ?''

சிரிப்பும், ஏக்கமுமான குரலோடு அவன் என்னைக் கேள்வியாகப் பார்த்தான்.

நான் படம் பார்க்கின்ற வழக்க முள்ளவன். ஜெயச்சந்திரனின் படங்களும் பார்த்திருக்கின்றேன். ''உழைப்பால் உயர்ந்தேன்'' என்ற தலையங்கத்தில் ஜெயச்சந்திரன் எழுதிய கட்டுரையொன்றையும் தற்செயலாக நான் படித்திருக்கின்றேன். தனக்குப் படிப்பதற்கு நிறைய விருப்பமிருந்தும், தன் வறுமை காரணமாக அது நிறைவேறவில்லையென்றும் ஆனால் பிற்காலத்திலே தான் நிறையப் படிப்பதற்கு உள்ளதாயும் ஜெயச்சந்திரன் எழுதியிருந்தது எனது நினைவிலே வந்தது. அவனும், அக்கட்டுரையைக் கத்தரித்து வைத்திருப்பான் என்பதில் இரண்டாம் பேச்சிற்கே இடமில்லை.

அலட்சியத்தோடு சொன்னேன் நான்.

''ஜெயச்சந்திரனும் பள்ளிக்கூடப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை என்று நான் படிச்சிருக்கிறன்''

அவ்வேளை, என் வார்த்தைகள் அவன் முகந்தனிலே நிறைந்த சிரிப்பாய்ப் பூரிப்பளித்தன. அவன் முகமே சிரிப்பாய், ஏன் அழகாகவுமிருந்

நிறைவோடு பெருமூச்சு விட்டான் அவன்.

''நீங்க தேத்தண்ணீர் குடிச்சிட்டீங்களோ? குடிச்சிருக்கமாட்டீங்கள்... தம்பிரெண்டு ரீ போடும், பசும்பால் ரீ!''

அவன் மிகத்தயவோடு அழைத்தான். சமாளிப்புடன் அவனை நான் புன்னகையோடு பார்த்து, ''இப்ப தேத்தண்ணி குடிச்சால் வேர்க்கும்'' என்றேன். அவன் சிறிது பேசாதிருந்தான். கணங்களே கழிய ''சிகரெட்?'' என்றான் தாழ்ந்த மெல்லிய ரலில், கேட்கக் கூசுகிறாற்போல.

சிறிது காரமாக ஒன்றுமே வேண்டாமென்றேன்.

தேனீர் போடப்போன பையனுக்கு இவன் கையசைத்து மறுத்தான்.

( 2 )

பொழுது போகவில்லை. நண்பன் ஒருவன் சினிமாப் பார்க்க அழைத்தான். ஒவ்வொரு முறை படம் பார்த்தபின்னரும், அதைத் திட்டுவதும், இனிப்படம் பார்ப்பதில்லை என்ற நீர்மேல் எழுதிய சபதமும் எடுக்கும் கூட்டத்தில் நாம் இருவரும் அடங்கியிருந்தோம். ஆனால் அன்றைக் கோவெனில் எனக்கு விருப்பமில்லாதிருந்தும் நண்பனின் வற்புறுத்தலுக்கு இணங்கிச் சம்மதித்தேன். ஜெயச்சந்திரன் நடித்த படம். இங்கே முதன் முறையாகத் திரையிட்டிருக்கிறார்கள்.

தியேட்டர் வாசலிலே ஒரு வெள்ளைச் சீலையை இழுத்துக் கட்டியிருந்தார்கள். சிவப்பு எழுத்துக்கள் நம்மை வாசிக்கும்படி கண்களிற்குள் வந்து நின்றன.

''ஜெயச்சந்திரனின் புதிய பாணி நடிப்பைக் காணவரும் எல்லா அன்பர்களுக்கும் எங்கள் வாழ்த்துக்கள். உங்கள் ஆதரவுக்கு எங்கள் நன்றி—ஜெயச்சந்திரனின் ரசிகரசிகைகள்''

சீலை ஆடிற்று. குவிந்திருப்போரின் கண்களிலே மகிழ்ச்சி மின்னியிருந்தது.

திடீரென்று, நான் பழகிக் கேட்ட குரல்:

''அண்ணை நீங்க ஒண்டுக்கும் யோசியாதையுங்க. அது நல்ல கிறவுட் வரும். நாங்க எங்கடை சிலவிலே ரோட்டெல்லாம் மையாலை எழுதித் தள்ளியிருக்கிறம். அங்கை பாருங்க முன்னாலை கட்டுறதுக்கு வாழையும் தோறணமும் வந்திட்டுது... நில்லுங்க, நான் அதை ஒருக்கால் ஒழுங்குபடுத்திக் கொண்டுவாறன் ... கந்தவனம் அந்த வாழையை இஞ்சை கொண்டுவாரும்''

சந்திரலிங்கம் புது மாப்பிள்ளைக் கோலத்தில் நின்றான். அவனது சுறுசுறுப்பைப் பார்த்து மனம் பூரித்த நிலையிலே நின்ற பருத்த உருவம் நிச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் தியேட்டர் நிர்வாகியாகவே இருக்கவேண்டும்.

நடிகர் ஜெயச்சந்திரனின் சிறிய 'கட் அவுட்' படம் ஒன்றையும் சந்திரலிங்கமே முன் நின்று செய்ததாய் அங்கே கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

நண்பனோடு நின்ற என்னை எதேச்சையாகக் கண்டு விட்ட சந்திரலிங்கம் முன்னேக்கி என்னிடம் வந்தான். களி துலங்கும் முகத்தினில் மிதப்பான பற்கள் சிரித்திருந்தன.

''நீங்க இப்பத்தான் வந்தனீங்களோ?''

நான் தலையசைத்தபடியே, என் நண்பன் ஓரக்கண்ணால் சந்திரலிங்கனை நோக்கியதை அவதானித்தேன்.

''காலமைதான் படப் பெட்டி வராட்டில் என்ன செய்யிறதெண்டு நாங்களெல்லாம் பயந்து கொண்டிருந்தனுங்கள். நல்ல வேளை, படப் பெட்டி வந்திட்டுது.''

நான் மௌனமாய், மௌனமே யுருவாகி நின்றேன்.

''இந்தப் படத்திலை ஜெயச்சந்திரன் புதுவிதமாய் நடிச்சிருக்கிறுராம். இந்தியாவிலை ரெண்டு தியேட்டரில் இது வெள்ளி விழாக் கொண்டாடியிருக்குது. சேலத்திலை ரசிகர்கள் எல்லாரும் சேர்ந்து ஜெயச்சந்திரனுக்கு வெள்ளித் துவக்கொண்டு அன்பளிச்சிருக்கினை''

''ஓ''

''முன்னாலை கட் அவுட் பார்த்தனீங்களோ? அந்த ஜெயச்சந்திரன் படத்துக்கு மாலை போட்டது ஆர் தெரியுமோ? நான்... நான் தான்! நீங்க இப்ப நில்லுங்கோ. நான், பிறகு நேரமிருந்தால் உங்களைச் சந்திக்கிறன், வந்ததுக்கு மிச்சஞ் சந்தோஷம்''

அரைமணித்தியாலங் கழிந்து படந் தொடங்கியது. என் நண்பனிடம் நான் சந்திரலிங்கனின் கதையை ஒன்றும் விடாமற் சொல்லி முடித்துவிட்டேன்—சந்தையில் காய்கறி விற்கும் தாய், குமராகிய பின் எட்டு வருஷமாய் பெருமூச்சு உதிர்க்கும் தமக்கை, ஈட்டிலுள்ள காணி, அடிக்கும் காற்றுக்கு முறிய முனகிக் கொண்டிருக்கும் கொட்டில் வீடு. படத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆத்திரம் மேலிட்டுக் கொண்டுவந்தது. தியேட்டரோ கை தட்டலாலும், சீக்காய் விசிலடிப்புக்களாலும், சிகரெட் புகையாலும் நிறைந்துகொண்டிருந்தது. கதாநாயகி முதல் கதாநாயகனின் சிறிய தாய் வரை எவ்வளவிற்கு உடலைக் காட்ட முடியுமோ அவ்வளவிற்குக் காட்டினுர்கள். இரவுக் கிளப், கனவு நடனம், பூந்தோட்டத்தில் புரள்தல் ஆகியசகல கட்டங்களிலும் ஜெயச்சந்திரன் புகுந்து விளையாடினுர். நீதி மொழிகளைச் சொல்கின்ற போதிலே அவரது முகம் குளோசப்பிலே வந்து நின்றது. விசிலும், கைதட்டலும் தியேட்டரையே அதைக்க வைத்தன...

எனக்குத்தலைக்குள் தணல்கொதித்தது.

அளவுமீறிய தொந்தரவுகள் நிறைந்த பின்னர், மனிதனுக்கு அந்த உணர்ச்சியின் அத்திவாரத்திலேயே நகைச்சுவையுணர்வு கிளர்ந்து விடுகிறது. என் நண்பன் பாமர ரசிகர்களை பார்த்து ரசித்துக் ண்டல்களாய்ச் சொரிந்துகொண்டிருந்தான்.

இடைவேளையின் போது சந்திரலிங்கம் எங்களிருவருக்கும் சோடா, கடலை ஆகியன வாங்கிக்கொண்டுவந்த போது எனக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது. அவனே விடாதவன் போல நின்றதால் வேறு வழியின்றி அவனது உபசாரத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். அவனுக்கு அது மிகவும் மகிழ்ச்சியை அளித்தது.

படம் முடிந்து வெளியே போன பொழுது சந்திரலிங்கம் உள்ளூர் எம்.பி.யோடு கதைத்துக்கொண்டு நின்றதைக் கண்டேன். அவரும் ஜெயச்சந்திரன் ரசிகமன்றத்தின் ஆதரவாளராக இருக்கலாம்.

* * *

''இந்தப் படங்கள் எவ்வளவு ஊசன்களையும், சமூகத்துக்கு கெடுதல்களையும் உண்டாக்குது...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நண்பன் ஆத்திரமாய்ப் பொழிந்தான். சந்திரலிங்கத்தை மன தில் வைத்துத் தான் அவன் அப்படிச் சொல்லியிருக்கவேண்டும்.

''சினிமாவில் குற்றம் சொல் லாதை. விஞ்ஞானம் அளித்தஅரிய கொடை இந்தச் சினிமா. இந்த நவீன சாதனத்தைப் பணம் ஒன்றையே குறி யாகக்கொண்ட அமைப்பில், நிச்சய மாக மனிதனின் முற்போக்குச்சிந்தனை யை மழுங்கடிக்கவும், கீழான உணர்ச் சியினை எல்லா விதத்திலும் தட்டி யெழுப்பிப்பணம்சம் பாதிக்கவுந்தான் பாவிப்பார்கள்'' நண்பன் சிறிது தாமதித்துச் சொன்னான்.

' ஆனல் தமிழ் சினிமா சுத்த மோசம். படந்துவங்கின நிலையிருந்து நான் கண்ட அந்தச்சினிமாவிசரன்...''

''தமிழிலே மட்டுந்தான் இப்பிடி யெண்டு நினைக்கப்படாது. மக்களுக் குச் சேவை செய்வதைப் புறக்கணித்த பணம் ஒன்றையே குறியாகக் கொண்ட கலாச்சாரம் நிலவும் எங்கேயுந்தான் இந்தக் கோளாறு உள்ளது. மேற்கு நாடுகளில் இதை விட மோசமான நிலைமையிருக்கிறது. நடிகர் பெயரிலே சங்கம், நடிக நடி கையரின் உடை நடை பாவனை களைப் பின்பற்றல், நடிகைகளின் நினைவாலேயே பைத்தியம் பிடிக்கும் பலவீனங்கள், மனமுறிவுகள் ஆகியன மேற்கு நாடுகளிலே சர்வசாதாரண மாகி விட்டன. மக்களிடையே பல விதத்திலும் சிந்தனை மழுங்கடிப் பினைச் செய்வதற்கு சினிமா சிறந்த சாதனமாயிருப்பதாலேயே இக் கெடு தல். இக் கெடுதலை புதிய கலாச் சாரம் ஒன்றை நிறுவுவதன் மூலமே தகர்த்தெறிய முடியும்...''

என் மனதின் எண்ணங்கள் வார்த்தை வடிவத்திலே ஒழுங்கு பெற்றன.

என்னை அவதானித்த நண்பன் கேட்டான்:

''அது நடக்குமென்று நீ நம்பு கிருயா?''

''நான் அதை மனமார நம்பு கின்றேன். ஆனல் இந்த அமைப்பில் அல்ல''

அவன் சிறிது யோசித்துவிட்டுச் சொன்னன்.

''நீ நம்புவது எப்ப நடக்குமோ?''

''சும்மா சொல்லி நம்பிக்கொண் டிருக்கவில்லை நான். முதலாளித்துவ அமைப்பில், முதலாளித்துவக் கலை இலக்கியப் படைப்பில், முதலாளித் துவ அம்சங்களேயிருக்கும். இதனுல் இந்த முறையை நொருக்கியெறிந்து, எல்லா மக்களுக்கும், கோடிக் கணக் கான உழைக்கும் மக்களுக்கும் சேவை செய்யும் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டுமென்ற போராட்டத்தைப் போற்றி, அதனேடு கலந்து, அதன் வெற்றியை எதிர்பார்க்கும் கோடிக் கணக்கானேரில் நானும் ஒருவன்!''

நண்பன் கண்களைக் கீழே தாழ்த் திவிட்டு நிமிர்ந்தான்.

''அப்படியானல் உன்னுடை கதைச்சவன் போன்ற ஆட்கள் இந்த நாடுகளிலே நெடுக இருப்பார்கள் என்ரு நீ சொல்கிருய்?''

''நிச்சயம். இவையெல்லாம் முத லாளித்துவத்தின் வியாதிகள்''

அந்த வேளை எனது மனக்கண் களிலே சந்திரலிங்கம் தோன்றினன். ஒரு பரிதாபகரமான ஏழைக் குடும் பத்தைச் சேர்ந்தவன் அவன். பொழுதுபோகவில்லையே என்று ஒரு நாள் அவன் படம் பார்த்திருப்பான் ஆனல் அந்தப் பொழுதுபோக்கிற் கூடாகவே அவனது மனம் நஞ்சுட் டப்பட்டு விட்டது. தன்னிலையெல் லாம் மறந்து ஏளனத்திற்கிடமான பித்தனைப் போல அவன் மாறிவிட் டான். அவனை இந்த நிலைக்குள்ளாக் கிய கலாச்சாரத்தை எண்ணுகையில் என் மனம் மிக வெறுப்பும் எரிச்ச லும் கொண்டு குமுறியது.

( 3 )

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரங் கழிந்த பின்னர் சந்திரலிங் கத்தை நான் ஆனந்த பவான் அருகே கண்டேன். வாங்கு ஓரமாக உள்ள தடியிலே பூசிக் காய்ந்த சுண் ணும்பைச் சுரண்டிக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கில் உட்கார்ந்திருந்த யாரோ புதியவனோடு சந்திரலிங்கம் கதைத்த வண்ணம் நின்றான். தொலைவில் நின்ற சந்திரலிங்கனை அவதானித்த போது ஜெயச்சந்திரன் (கடைசியாக நான் பார்த்த படத்தில்) போலவே சேர்ட் அணிந்திருந்தது தெரிந்தது. அந்தச் சேர்ட்டை வாங்குவதற்காக அவன் தன்னுடைய முதிர்ந்த, வறுமையினால் சோர்ந்த தாயோடு பெரிய சண்டையே பிடித்திருப்பான் என்பதில் ஐயமேயில்லை.

நான் ஆனந்த பவானை அண்மிய போதுதான் அவன் என்னைக் கண்டு கொண்டான். முகத்திலே உதட்டோரமாகப் பிளாஸ்டர் போட்டிருந்தது.

"என்ன போன கிழமை கடைப் பக்கம் ஆளையே காணயில்லை. எங்கை போயிருந்தீர்?"

"ஓரிடமுமில்லை" அவன் இழுத்தான்.

அவனது முகத்தைப் பார்த்தபடி கேட்டேன்.

"என்ன இது சொண்டிலை பிளாஸ்டர்? யாரோர்டையாவது சண்டை பிடித்தனீரோ?"

"இல்லை. அது வேறைகாயம்" அவன் கன்னத்தைத் தடவிக்கொண்டு என்னைப் பார்த்தான்.

"வேறைகாயமெண்டால்? சும்மா சொல்லும்?"

சிறிது நேரத் தயக்கத்தின் குறுக்கீடலின்பின் சொன்னான் அவன்.

"சில நாட்களுக்கு முந்தி நான் சலூனுக்குத் தலைமயிர் வெட்டுறதுக்குப் போயிருந்தன். நான் படத்திலை நடிக்கப்போற விஷயமும் அவனுக்கு நல்லாகவே தெரியும். அடிக்கடி என்னைக் கேட்டிருக்கிறான். இந்தமுறை அவன் என்னை நல்லாகக் கவனிச்சுப் பார்த்தான் வாய்க்குள்ளை அந்த நேரம் அவன் சிரிச்சபோது எனக்கு அவன் மனதுக்குள்ளை ஏதோ கள்ளம் வைச்சிருக்கிறான் எண்டு தெரிஞ்சுது. ஏன் ஐசே சிரிச்சனீர் என்று கேட்டன்....சும்மா சொல்லும். நான் கோவிக்கமாட்டேன்...நான் இப்பிடிக் கேட்டதும் அவன் சொன்னான்..."

நான் சந்திரலிங்கத்தைத் துரிதப் படுத்தினேன்.

"என்ன சொன்னவன்...?"

"உம்மிலை எல்லாம் வடிவுதான் ஐசே. ஆனால் இந்தப் பல்லுகள் மிதந்திருக்கிறது பெரிய அரியண்டமாயிருக்குது. இந்தப் பல்லைப் பார்த்திட்டு உம்மைப் படம் நடிக்கவும் சேர்க்க மாட்டாங்கள்."

அவன் சொல்லிக்கொண்டு போகையில் முகம் வாடிற்று. சந்திரலிங்கனை நன்றாக உருவேற்றி விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள் என நினைத்தபோது அவன் மீது பச்சாதாபமேற்பட்டது.

"நான் வீட்டை போயிருந்து கண்ணாடியிலை என்னுடைய முகத்தை ஓயாது பார்த்துக்கொண்டிருந்தன். இரவு சாப்பிடக்கூட இல்லை. எப்பிடிச் சாப்பிட மனம் வரும்? அவன் சொன்னது உண்மைதான். என்ரை பல்லு மிதந்து போய்ப் பார்க்க வலு அரியண்டமாகத்தான் இருந்தது".

"எப்பிடி ஜெயச்சந்திரன் இப்ப உன்ரை புதுச் சோடி ஆர்?"

சைக்கிளில் போய்க்கொண்டிருந்த ஒருவன் சந்திரலிங்கத்தைப் பார்த்துக் கண்களை வெட்டிச் சிரித்தபடியே கேலி மொழியை அவன் முன்னே வீசிச் சென்றான். சந்திரலிங்கனின் முகம் அந்த நிமிஷத்திலே கறுத்துச் சினந்தது.


"இஞ்சை சில குரங்குகள் இருக்குது. என்ரை முன்னேற்றத்தைப் பார்த்து வயிறு எரியுறாங்கள், எனக்கு எத்தினை கரைச்சல்? மூளை வெடிச்சிடும் போலையிருக்குது. சுறுக்காய் இந்தியாவுக்குப் போய் ஜெயச்சந்திரனைச் சந்தித்தேன் என்றால் எல்லாக் கஷ்டமும் போயிடும். நான் எதிலையோ கதையைத் தொடங்கி எங்கையோ போறன் என்ன? உங்களுக்கு இது அலுப்பாக இருக்குதா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தலையசைத்தேன், அர்த்தப்பட அல்ல. ஆயினும் என் மனதிலே அவன் மீது நான் கொண்டிருந்த அனுதாபம் குறைவதாக உணர்ந்ததோடு, அவனுக்குப் புத்தி சொல்லிப் புதியவனாக வார்த்தெடுக்க வேண்டுமென்ற விருப்பமும் தீவிரப்பட்டது.

''வீட்டிலை போயிருந்து நல்லா யோசிச்சன். சாமக்சோழியும் கூவியிட்டுது. இந்தப் பல்லுத்தான் என்ரை முன்னேற்றத்தைக் கெடுக்குது எண்டு நினைக்க நினைக்க ஆத்திரமும், மனவேதனையுமாயிருந்தது. என்னையறியாத மன ஆவேசம் வந்திட்டுது. திடீரெண்டு எழும்பிப் போய் மேசையிலை போட்டு என்ரை




முகத்தைப் பல்லை இடி இடியெண்டு இடிச்சன்......''

அவன் அந்தச் சம்பவத்தையுணர்ந்த வேதனையோடும், பாவனையோடும் சொன்னபோதில், எனக்குப் பற்களும், உடம்புமே கூசின. பேசாமல் அவனது மேற் சொண்டையே பார்த்தபடி இருந்தேன்.

''கொஞ்ச நேரத்துக்குப் பிறகு எனக்கு என்ன நடந்ததெண்டு தெரியாது. ஆச்சியும் அக்காவும் என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனவையாம். நான் வாயாலை இரத்தம் வழிய வழிய அறிவே கெட்டுப் போனன். மேற் சொண்டு கிழிஞ்சு இரண்டு இழைப் போட்டிருக்கு. ஒரே வலி. மூண்டு நாளாகப் படுத்த படுக்கை. எனக்கு இப்பொழுது பெரிய கவலை — நீங்க சொல்லுங்க, இந்தப் பல்லை வடிவாக்க என்ன செய்யலாம்?''

அவன் சுற்று முற்றும் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கடை காலிலை விழுந்து கும்பிடுவன். நீங்க இதுக்கு ஒரு வழி சொன்னியளெண்டால் நான் உங்களைக் கடவுளாய்க் கும்பிடுவன்."

அவன் குரலின் தளதளப்பைக் கேட்க எனக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. அவனை, வழிதவறிய பாதையிலிருந்து மீட்டெடுத்து வல்லமையுள்ள இளைஞனாக மாற்றுவதற்கு நான் முயற்சிக்கின்றேன். ஆனால் அவனோ?

"நான் ஆரவேனை விசாரிச்சுச் சொல்லுறன்"

"முழுப் பல்லையும் பிடிங்கிப் போட்டு, பொய்ப் பல்லுக்கட்டலாம் எண்டு சொல்லுறுங்கள். ஆனால் அதுவும் பின்னுக்குக் கூடாது"

நான் அவனது வீட்டினை நினைவு கூர்ந்தேன். ஒரு நேரச் சோற்றுக்கே அவதிப்படும் வயிறுகள், சந்தையில் காய்கறி விற்கும் தாய். குமராகிய பின் எட்டு வருஷங்களாய்ப் பெருமூச்சு உதிர்க்கும் தமக்கை. ஈட்டிலுள்ள காணி, அடிக்கும் காற்றுக்கு முறிய முனகிக் கொண்டிருக்கும் கொட்டில் வீடு........

"அது என்ன கஷ்டம் வந்தாலும் நான் படம் நடிக்கிறது நடிக்கிறதுதான்."

"அதெல்லாம் சரி உம்முடைய வீட்டைப் பற்றி நீர் யோசிக்கிறதில்லையா? வயதுபோன உம்முடைய தாயார், கலியாணம் முடியாத அக்கா, இவையளுக்கு உதவி செய்துவிட்டு உம்முடைய எண்ணப்படி போனால் என்ன?"

அவன், மேற் சொண்டில் ஒட்டப்பட்டிருந்த பிளாஸ்டர் சுருங்கச் சிரித்தான்,

"என்னாலை படம் நடிக்கிறதைத் தவிர வேறை தொழில் செய்ய முடியுமெண்டு நீங்க நினைக்கிறீங்களா? என்ரை சீவன் அழிஞ்சாலும் அது முடியாத விஷயம். அதுவும் இனிப் படிச்சு வேலைக்குப் போகமுடியுமோ? அல்லாவிடில் என்னாலை கூலி வேலைக்குத்தான் போக முடியுமா? நீங்களே நல்லா யோசித்துப் பாருங்க..."

என்னை மீறிக்கொண்டு எனக்கு ஆத்திரம் வந்தது.

"சும்மா பேயன், விசரன் மாதிரிக் கதைக்காதையும். படம் நடிக்கப் போறுராம் படம்! வீட்டிலை ஒரு நேரச் சோத்துக்கே வழியில்லை. எங்கையாவது போய் வேலைசெய்து உழைப்பம், நல்ல நோக்கத்துக்காகப் பாடு படுவம் என்ற யோசினையில்லை... தறுதலைப்படமும் நடிப்புந் தான்......"

அவை என்னை மீறி வெடித்த வார்த்தைகள். என்னை எவ்வளவு கட்டுப்படுத்திவைத்து, அவனது அலம்பலையெல்லாம் பொறுத்து, அவனை அவனது மனநோயிலிருந்து மீட்டெடுக்கலாமென நான் நினைத்தேனோ, அந்த நினைப்பு வீணானது என்ற ஆத்திரத்தில் என்னை மீறி என் வார்த்தைகள் நெருப்பின் வெம்மையோடு சீறின.

நிமிஷங் கழிய அவனைப் பார்த்தேன். யாவுமிழந்து அழுவார்போல என் முன் ஏக்கமாகி நின்றான்.

( 4 )

தவணை விடுமுறை வந்ததும் நான் வீடு போய்விட்டேன். ஒரு மாதங் கழிய மீண்டும் பள்ளிக்கூடத்திற்கு வந்த முதல் நாளன்று பஸ்ஸிற்காகக் காத்திருந்த போதிலும் சந்திரலிங்கனைக் காணவில்லை. மறுநாள், மறுநாள், ஒரு வாரமாகியும் அவனைக் காணவில்லை. ஏதோ, அவ்விடத்திலே வெறிச்சோடியது போல எனது மனம் பிரமையுற்றது.

அவனது வீட்டிற்குப்போய் விசாரிக்கலாமோ என்றுகூட நினைத்தேன். தாயின் பரிதாப முகத்தை நினைத்ததும் அங்கு போகவும் மனம் வரவில்லை.

இரு வாரங்கள் கழிந்தன. நான் பஸ்ஸிற்காகக் காத்துக்கொண்டு நின்றபோது இரு இளைஞர்கள் கதைத்தது காதிலே விழுந்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இவன் சந்திரலிங்கம் இந்த இடத்திலை இல்லாதது பெரிய அந்தரமாயிருக்குது. அவன் நிண்டால் என்ன முஸ்பாத்தியாகப் பொழுது போகும்”

“முஸ்பாத்தியென்ன, முஸ்பாத்தி? பொறுப்பில்லாமல் அலட்டிக்கொண்டு திரிஞ்ச விசரன். வீட்டிலை அதுகளுக்கு ஒருநேரக் கஞ்சியில்லை. இப்ப அவன் எங்கெங்கை ஓடிப்போய் நிக்கிறானோ?”

பிறகும் அவர்கள், அவனைப்பற்றிச் சிரித்துக் கதைத்துக்கொண்டே போனார்கள்.

அவர்கள் தொடர்ந்து கதைத்ததை என்னால் அவதானித்தும் கேட்க முடியவில்லை.

“எங்கை ஓடிப்போயிருப்பான் படம் நடிக்க இந்தியாவுக்கோ?”



## தனிநபர்

**யோ.பெ**

அவன் சினிமாக் கொட்டகையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். சினிமாப் படம் ஆரம்பமாகும் நேரம்; அத்துடன் அது இன்றுடன் முடிவடைகிறது.

அவன் வழியில் யாரையும் பார்க்காது ‘கடவுளே படம் தொடங்கக்கூடாது’ என்று எண்ணியவாறு வேர்க்கக் களைக்க சினிமாக் கொட்டகையை அடைந்தான்.

இன்னும் சினிமாப் படக்காட்சி தொடங்கவில்லை.
உள்ளே செல்வதற்கு பிரவேசச் சீட்டுக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அவனும் அதைப் பெற வரிசையில் நின்றான்.
‘கடவுளே படம் தொடங்கக்கூடாது’ என்று அவன் மனம் அடித்துக்கொண்டேயிருந்தது.

அவன் பிரவேசச் சீட்டுப் பெற்றுவிட்டான்.

அவ்வளவுதான், அவன் வேறொன்றையும் யோசிக்கவில்லை. சினிமாக் கொட்டகைக்குள் சென்று அமர்ந்துவிட்டான். உள்ளேயும் ஜனக் கூட்டம் அவனுக்கு முன்பாக வந்து இருக்கிறார்கள்.
சிறிது நேரம் சென்றது. காட்சி ஆரம்பமாகவில்லை.

நேரம் சென்றுகொண்டிருந்தது.

அவனுக்கு பொறுக்க முடியாத எரிச்சலாக இருந்தது.
“இவர்கள் ஏன் இன்னும் காட்சியைத் தொடங்காமல் இருக்கிறார்கள் மடையர்கள். எவ்வளவு நேரம் காத்திருப்பது?” என்று முணு முணுத்தான்.

ஆனால்,

வெளியில் அப் படத்தைப் பார்க்கும் ஆவலோடு பிரவேசச் சீட்டுப் பெறுவதற்காக மக்கள் வரிசையில் காத்துக்கொண்டு நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையான

உத்தரவாதமான

அச்சடிப்



பிடவைகளுக்குச்

சிறந்த

இடம்

★

# விஜயா இன்டஸ்ரி

201, கிரேண்ட்பாஸ் வீதி,
கொழும்பு 14.

டெலிபோன் : **20027**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படியும் பெரியவன்தான்



''நெணியான்''

கலாசாலையின் வெளிப்புறக் 'கேற்'றையும் தாண்டி வெறுப்போடு ஓடிக்கொண்டிருக்கிறான் காசிநாதன். 'கேற்'றைத் தாண்டும் போது ஒரு தடவை திரும்பி, கலாசாலையை நோக்கிக் காறித் துப்பவேண்டுமென அவனுள் அசூயையான ஒரு உத்வேகம். அவனுக்கிருக்கும் மனக்கொதிப்பும் பதட்டமும் அதனைக்கூடச் செய்யவிடாது உலுப்ப, திரும்பிப் பார்க்காது அருவருத்து ஓடிக்கொண்டிருக்கிறான்.

ஆனால் இந்தக் கலாசாலைக்குள் அடி எடுத்து வைத்தபோது அவன் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. ஒன்றா? இரண்டா? பதினைந்து ஆண்டுகள் ஆக்கிரமித்து அவன் இந்தக் கோட்டையைக் கைப்பற்றினான். கோட்டைக்குட் புகுந்தபோது அரச கம்பீரத்தோடு, தர்ப்பார் நடை நடந்து பவனி வந்து குதூகலித்தவன் தான் அவன். வேறு எவருமே சாதிக்க முடியாததைச் சாதித்த பெரிய சூரன் என்று தன்னையே தான் எண்ணி இறுமாந்தான்.

பல ஆண்டுகளாக அவன் உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்த ஏக்கம் அழிந்து இறுமாப்பு ஓங்கிய போது அவன் மனத்திரையில் அற்ப புழுவாக நெளிந்தவன் துரைசிங்கம்.

துரைசிங்கம் அவன் வீட்டுக்கு நான்கைந்து வீடுகளுக்கப்பால் குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் ஆசிரியனாகி இரண்டு ஆண்டுகளுக்குப் பின் துரைசிங்கத்துக்கும் ஆசிரிய உத்தியோகம் கிடைத்துவிட்டது.

இருவரும் ஒரேகாலத்தில் ஆசிரிய கலாசாலையில் சாதாரண பயிற்சி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை எழுதினார்கள். முதல் தடவையிலேயே பயிற்சி பெறுவதற்காகத் துரைசிங்கம் தெரிவுசெய்யப்பட்டுவிட்டான். இந்தத் தோல்வியை அவனால் தாங்கிக்கொள்ள இயலாது புழுவாய்த் துடித்துக்கொண்டிருந்த போது, அவன் வீட்டுப் பனையில் கள்ளிறக்க வந்த துரைசிங்கத்தின் தகப்பன் கேட்டான்......

''தம்பி றெயினிங் கொலிச்சுக்கு எடுபடயில்லேயே......''

''ஓம்... இன்னும் எனக்கு மறுமொழி வரயில்லே......''

''என்ரை மேனைக் கூப்பிட்டிருக்கினம்... நேர்முகப் பரீட்சையும் முடிஞ்சு போச்சு......''

''அப்படியே............ நல்லது தான்......''

''எல்லாரையும் எடுத்தாச்சாம் இனிமேல் இந்தவரியம் ஒருதரையும் எடுக்காயினமெண்டு என்ரை பொடியன்தான் சொன்னான்......''

''நான் உந்த றெயினிங்குக்குப் போற எண்ணமில்லே... அதனால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அவளவு கவனமாச் சோதினே எழுதயில்லே... ''

''வேறெயும் ஒரு றெயினிங்கு இருக்கே தம்பி......''

''ஓமோம் விசேடபயிற்சி எண்டு ஒண்டிருக்கு... அதுக்குப் போனுல் உன்ரை மேன் சிங்கனுக்குக் கிடைக்கப் போறதை விட ஒரு மடங்கு சம்பளம் கூட... நான் அதுக்குத்தான் போகப்போறன். உன்ரை மேனுக்கு அதுக்குப்போக ஏலாது.''

''ஏன் தம்பி அவனும், தம்பி சொல்லுற றெயினிங்குக்குப் போயிருக்கலாமெல்லெ... சம்பளம் கணக்க வரும் ''

''உன்ரை மேன் சிங்கனுக்கு என்னைப் போலெ இங்கிலீசு தெரியாது. நல்லா இங்கிலீசு தெரிஞ்சவைதான் அங்கே போகலாம்;

இப்படிச் சொன்னபோதே உள்ளத்திலும் திடசங்கற்பம் செய்து கொண்டான் அவன். இந்த உறுதியின் ஊன்றுகோலில் பல ஆண்டுகள் முயன்று ஆங்கிலம் படித்தும், எஸ். எஸ். ஸி தராதரத்தில் தானும் ஆங்கிலத்தில் சித்திஅடைய முடியவில்லை; ஆங்கிலத்தில் விசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியனுக வேண்டுமென்ற அவா வெறும் கனவு என்பதை உணர்ந்தபோது, வர்த்தக பாடத்தைப் படிக்கத் தொடங்கினுன். கடும் முயற்சியின் பின்னர் பலாலி ஆசிரிய கலாசாலைக்குட் புகுந்தபோது உள்ளமெல்லாம் நிறைந்து கிறங்கிக்கிடந்தவன் துரை சிங்கத்தையும் நினைத்துக்கொண்டான்.

''துரைசிங்கம்...... சிங்கன்... அவனைவிட என்டைக்கும் நான் பெரியவன்தான். அவர் றெயினிங் முடிச்சுப் பதினைஞ்சு வரியமெண்டால் எனக்கென்ன? நான் இரண்டு வரியத்திலே வெளிக்கிட்டவுடனே அவனைவிட எனக்குச் சம்பளம் கூட. அவன் பதினைஞ்சு வரியம் 'சேவிசு' போட்டாலும் எனக்குக் கிட்ட நிக்கேலாது... றெயினிங் முடிஞ்சு அடுத்ததையிலேயே நான் கலியாணம் செய்துபோடவேணும், எனக்கென்ன வயது அவளவு பெரிய கனக்கவே...! இரண்டு வரியமும் கழிய முப்பத்தேழாகும் படிச்சவை கலியாணம் செய்யிறது அப்பிடித்தானே... தலையிலெதான் இடைக்கிடை நரைச்சுப் போச்சு. அதுக்கென்ன செய்யிறது...! இந்தக் காலத்திலெ பத்து வயதுப் பொடியளுக்குந்தானே நரைக்கிது. என்னை ஒரு 'ஸ்பெஸல் றெயின்'ரை கட்டிறதுக்கு எத்தினை பேர் நான் முந்தி நீ முந்தி எண்டு நிப்பினம். சும்மாயல்ல முறையான சீதனமும் வாங்கிக்கொண்டுதான்...... இப்ப அவன் சிங்கன் என்னைப் பாத்து''

பாதி விழி மூடி நினைவுச் சுகத்தில் மிதந்துகொண்டிருந்தவனை, ''ஹலோ மாஸ்டர்...'' என்ற பல குரல்கள் விழித்தெழச் செய்தன. அவனை நோக்கி நீண்ட கரங்களில் ஒன்றை அவனும் பற்றிக் குலுக்கினுன். அதன் பின்னர் ஒவ்வொருவராகப் பலர் அவன் கையைப் பிடித்துக் குலுக்கினுர்கள். புதியவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் வரவேற்பின் ஆரம்பந் தான் அது.

''மிஸ்டர் உங்களுக்குப் பேர் காசிநாதன் தானே...''

முதலில் அவனோடு கைகுலுக்கியவன் தான் அவனைப் பார்த்துக் கேட்டான்.

''ஓமோம் அதெப்பிடி...... தெரியும்...!''

வினவையே விடையாக்கிக் கொண்டு இதுவரை கவனிக்காத அந்த முகத்தை உற்று நோக்கினுன்.

''ஆ... துரைசிங்கனு . இல்லை... இல்லை .. அவன்ரை மூண்டாவது தம்பி... துரையன் துரைரத்தினம்... இவனு என்ரை கையிலெ தொட்டவன்! சீ... ! என்னை ஆறெண்டு தெரிஞ்சு கொண்டும் என்ரை கையிலெ தொட எவளவு துணிவு வேணும்...''

இதுவரை மனத்திலிருந்த ஆனந்தவெள்ளம் வடிந்த வழி தெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமல் உள்ளத்துள் உறுமினன். இருந்தாலும் காட்டிக்கொள்ளாது அவன் முகத்தை வெறுப்போடு நோக்கினன்.

"இதென்ன மாஸ்டர்... உங்களை எனக்குத் தெரியாதா! ஒரே ஊரிலை இருந்துகொண்டு ..."

துரைரத்தினம் அவனைப் பார்த்துச் சாதாரணமாகக் கூறினன்.

"ஓகோ... என்னைப் பாத்து ஹலோ எண்டு கூப்பிட்டதிலை இவரும் ஓராள்... எவளவு திமிர். இவருக்கு நான் ஹலோவாப் போனன்..." என்று நினைத்துக் கொண்டு,

சரி மரியாதை கெடாமல் இப்ப பாத்துக்கொள்ளுவம்..." என்று கருத்தில் கொண்டு, "தம்பி கொழும்பிலை கன காலம் இருந்தபடியால்தான் எனக்குத் தெரியயில்லெ... இப்ப தெரியிது......"

"மாஸ்டர் எந்தக் கோஸ்..."

"கொமேஸ் தம்பி..."

"கூப்பன் கோஸ் தான்..."

பக்கத்தில் இருந்தவன் ஒருவன் சொன்னன்.

எல்லோரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள்.



"அப்ப நீ... துரைசிங்கன்ரை..." அவன் முடிக்கவில்லை.

'ஓமோம்... துரைசிங்கம் மாஸ்டரின்ரை தம்பி, நான் சின்னண்ண ரோடை கொழும்பிலெ இருந்தனுன். அதுதான் உனக்குத் தெரியயில்லெ, நீ எங்கடை வீட்டுக்குக் கிட்டத் தானே இருக்கிறனி ''

"என்ன... என்ன... இவன் என்னை மாஸ்டர், நீங்கள் எண்டு கதைச்சவன் நீ எண்ணுறனே... சரி

அவனும் ஹி... ஹி... என்று வாயைத் திறந்து சமாளித்துக்கொள்வதாகத் திருப்திப்பட்டான்.

"தம்பி எந்தக் கோஸ்......" துரைரத்தினத்தைப் பார்த்துக் கேட்டான் அவன்.

"இங்கிலீஸ்... ..."

நெஞ்சம் துணுக்குற்றுப் பொருமையால் வெந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இரண்டாம் வரியமே...''

''இல்லை முதலாம் வருஷந்தான் மாஸ்டர் ஏன் இவளவு பிந்தி !''

''பாவம்... மாஸ்டர் வயது போன காலத்திலெ 'செக்கன்ட்' 'லிஸ்ற்'றிலை தான் வரமுடிஞ்சுது...''

அருகில் இருந்த இன்னெருவன் மெல்லச் சீண்டினுன்.

அவனுக்கு மூண்டுவிட்ட உள்ளம் பற்றி எரியத் தொடங்கியது. எப்போது அவர்கள் அந்த இடத்தை விட்டுத் துலைவார்கள் என்று எண்ணினுன். ஆனுல் எழுந்துபோகும் நோக்கம் அவர்களுக்கில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கேள்வியை அடுக்கினுர்கள்.

''மாஸ்டருக்கு எத்தினை பிள்ளை......''

''நான் இன்னும் கலியாணம் செய்யவில்லெ...''

''பொய் சொல்லாதையுங்கோ... குறைஞ்சது ஐஞ்சு பிள்ளையாவது இருக்கும்...''

''சத்தியமாச் சொல்லுறன் இன்னுஞ் செய்யேல்லெ...''

''இவளவு காலமும் கலியாணம் செய்யாமல் என்ன செய்தநீங்கள்...''

''..............................''

''எத்தினை வரியம் சேவிசு...''

''பதினேழு வரியம்...''

''இவளவு காலமாக இஞ்ச வாரதுக்குத் தவஞ்செய்துகொண்டு இருந்த நீங்களே...''

''ஹி... ஹி... ஹி...''

''அது சரி மாஸ்டர் நீங்கள் இந்தக் கூப்பன் கோசுக்கு வந்தநேரம் கோழிக் கோசுக்குப் போயிருக்கலாமே''

''அதென்ன தம்பி கோழிக் கோசு .....:''

''இஞசை மாஸ்டர்... கூப்பன் கோசு, கோழிக் கோசு, ஆணி அடிச்சான் கோசு, குசினிக் கோசு என்டெல்லாம் கன கோசுகள் கிடக்கு, இண்டைக்குத்தானே நீங்கள் வந்திருக்கிறியள். இனிமேல் கொஞ்சங் கொஞ்சமாக விளங்கும்...''

அவர்கள் வந்து போன பின்னர் அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்த இன்பம், இருந்த இடம் தெரியாது பறந்தது, இரவெல்லாம் தூக்கமின்றி வேதனைப்பட்டுத் துடித்தான்.

''சிங்கன் போனுல் அவன் தம்பி துரையன்... சரி சரி எப்பிடியும் நான் இவன்களை விடப் பெரியவன் எண்டு நிலைகாட்டத்தான் போறன்'' என்று முடிவு செய்து கொண்டான்.

அடுத்த நாள் இரவு சாப்பாட்டு மண்டபத்தில் நடந்தசம்பவம் அவன் ஆத்திரத்தை மேலும் கிளறியது.

புதிதாகக் கலாசாலைக்கு வந்தவர்கள் தமது சாப்பாட்டுக்கோப்பைகளைத் தலைக்குமேலே தூக்கிப்பிடித்த வண்ணம், தலைவணங்கி ஒவ்வொருவராக மண்டபத்துள் நுளைய வேண்டுமெனப் பழைய மாணவர்கள் கட்டளையிட்டார்கள். அவர்களோடு துரைரத்தினமும் நின்றுன்.

புதிய மாணவர்கள் எவ்வளவு மறுத்து நின்றும் அவர்களை எதிர்க்க முடியவில்லை. இறுதியில் அவர்கள் கட்டளைக்குப் பணிந்து போனுர்கள். அப்போது காசிநாதன் மண்டபத்துள் நுழையும்வேளை, ஒருவன் முன்னேவந்து ''நெத்தியிலெ கிடக்கிற திருநீத்தை அழியும்'' என்று கட்டளை இட்டான்.

காசிநாதன் அவனை முறைத்துப் பார்த்து ''முடியாது'' என்று அகங்காரத்தோடு மறுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அழி அல்லது கேந்தியில் திருநீற்றைத் தொட்டுத் தின்னிட்டுப் போ...'' என்று உறுமினன் இன்னொருவன்.

அப்போதும் அவன் 'முடியாது' என்றுதான் துணிந்து நின்றான்.
ஏக காலத்தில் பலர் சூழ்ந்து கொண்டார்கள்.

அவனால் பணிந்து போவதைத் தவிர ஒன்றும் செய்ய இயலவில்லை.

இப்படிச் சூழ்ந்து வந்தவர்களில் துரைரத்தினமும் ஒருவனென்பதை அவனால் பொறுக்க முடியவில்லை. அதன் பின் அவனைச் சந்திக்கின்ற ஒவ்வொரு மாணவனிடமும் துரைரத்தினத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கினன்.

''பெரிய துரை மாதிரிக் கோட்டும் சூட்டுமாகத் திரியிறனே துரைரத்தினம். அவன் ஆரெண்டு தெரியுமே... அங்கே நாங்கள் கிட்டவும் விடம். உவன்ரை தேப்பனுந் தாயுந் தான் எங்கடை வீட்டுத் தொண்டு துரவுகள் செய்யிறது... அங்கே உவை எங்களைக் கண்டால் காலில் செருப்பக் கழட்டிப் போடுவினம். தேப்பன் தோளிலை சால்வை போடான்.''

இரவு படுக்கைக்குப் போகு முன்னர் ஒவ்வொரு கட்டிலாக மெல்லச் சென்று பிரசாரஞ் செய்வதே அவன் தொழிலாகப் போய்விட்டது. முதலாம் வருட மாணவர்கள் மத்தியில் ஒருவார காலத்துக்குள் தன் தொண்டைச் செவ்வனே செய்து முடித்துக் கொண்டு இரண்டாம் வருடத்தவர்களை அணுக எத்தனித்தான்.

ஒரு நாள் இரவு இரண்டாம் வருடத்தவர்களின் விடுதிக்குட் கால் எடுத்து வைக்கப் போன போது, ''ஆரவன் முதலாம் வரியம் உள்ளுக்கு வாராதே...' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டான்.

''என்ன கொடுமை நாங்கள் உந்த எழியசாதியளைக் கோயிலுக்கை விடாமல் தடுக்கிற மாதிரி என்னை ஹொஸ்டலுக்கை வராதை எண்ணுறுனே...'' என்று மனம் பொருமிக் கொண்டு உள்ளே போகத் தயங்கி நின்றான்.

''ஆர் கூப்பன் கோசுத் திருநீறே போபோ... உனக்கிஞ்ச என்ன வேலை...''

மறுபடியும் அதே குரல் அவனை விரட்டியது.

அதே நேரம் அந்த மண்டபத்துள் இருந்த துரைரத்தினம் 'கலகல' என்று சிரித்தான். துரைரத்தினத்தைக் கண்ட பின்னரும் அவனால் தயங்கி நிற்க முடியவில்லை.

''அவர் துரைரத்தினம் எண்டவரும் முதலாம் வரியந்தானே அவர் உள்ளுக்குப் போகலாம் நான் போகக் கூடாது. நான் என்ன அவனைப் போல உள்ளுக்குப் போகாத சாதியே! அவனை விடுகிறுங்கள். நானை தான்போகக்கூடாது. அவன் தேவடியாள் மாதிரி எல்லாரையும் வளைச்சுப் போடுறன். நான் என்ன கண்டவனுக்கும் பல்லைக் காட்டுறவனே! எல்லாப் பொடிச்சியளோடையும் அவருக்குப் பழக்கம். எங்கடை கோசிலெ இருக்கிற பெட்டையளோடை கூடக் கதைக்கிறன் அவள் அந்தக் கறுப்பி... ஒரு மாதிரி நடப்பாள். அவளோடை கூட அவன் கதைக்கிறன். தம்பியை நான் சரியான இடத்திலே இறக்கி வைச்சாத்தான் நான் ஆரெண்டு தெரியும். எண்டாலும் நான் அவனை விட '' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டிருந்தான். அவமானத்தோடு திரும்பி நடந்தான். அப்போதுதான் திடீரென்று ஒரு எண்ணம் அவன் ஞாபகத்துக்கு வந்தது.

விடுதிக்கு வந்து சேர்ந்ததும் தன்னேடு ஒத்துழைக்கக் கூடிய யாழ்ப்பாணத்து நண்பர்கள் சிலரை அழைத்துப் பேசினன்.

''முதலாம் வரிய மாணவர்களுக்கெண்டு மாணவ தலைவன் ஒருதரைத் தெரியப் போகினமாமே...''

''ஓமோம்...இன்னும் ஒரு கிழமையிலெ நடக்கப்போகுது. அப்பிடித் தெரிவு செய்யப்படுகிறவன்தான் வாற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியம் முழுக்கலாசாலைக்கும் மாணவ தலைவன்...''

''அப்ப ஆரையாம் தெரியா போரினம் ''

''துரை ரத்தினத்தை எண்டு சொல்லுகினம்.''

ஆர்? துரை ரத்தினமோ...சீ! என்ன பேய்க்கதை கதைக்கிறாய்...''

''ஓமோம் அப்பிடித்தான் கதை அடிபடுகிறது...அவன் தான் தகுதியாம்...''

''சும்மா விளல் ஞாயம் கதையாதையுங்கோ...எங்களுக்குள்ளை ஒரு தகுதியானவன் கிடையாதே?''

''அதுசரி... அப்பிடி என்டால் அவனை எதிர்த்துக் கேக்கிறது ஆர்...?''

''தம்பி வைத்திலிங்கம் நீ கேள். மற்றதெல்லாம் நாங்கள் பாத்துக் கொள்ளுறம்...''

''எனக்கு இங்கிலீசு தெரியா தண்ணை...''

''அப்ப காசிநாதண்ணை நீங்கள் இங்கிலீசும் படிச்சதெண்ணுறியள் நீங்கள் போட்டிக்கு நில்லுங்கவன் ''

''இல்லை நான் கொஞ்சம் வெளியாலை நிண்டால் தான் வேலை செய்வன்.. ''

''அதுக்கென்ன செய்யிறது...நீங்கள்தான் தகுதியான ஆள் நாங்கள் முழுமூச்சாக வேலை செய்யிறம்...''

''அவன் ஆரெண்டு நாங்கள் சரியாச் சொன்னால் அவங்களும் எங்களுக்குத்தான்...''

இந்தக் 'குசு குசு' ஆலோசனையின் முடிவில் அவன் துரைரத்தினத்தோடு போட்டியிட முன்வந்தான் இரகசியமாக இரண்டு பேரையும் சேர்ந்தவர்கள் வாக்குச் சேர்க்கத் தொடங்கினார்



## அஞ்சுவது யாருக்காக?

எட்டுவயதுச் சிறுவன் அவன். ஒருநாள் தனது தந்தையிடம். வந்தான் தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ளும் கலை நுணுக்கத்தைக் கற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டான். தந்தையும் சொல்லி கொடுத்தார். மகன் அதில் வெகுவாக முன்னேறியிருப்பதைத் தெரிந்துகொண்ட தந்தை மகிழ்ச்சியோடு சொன்னார்:

''மகனே, இப்பொழுது உனது பாடசாலைப் பையன்களுக்கு நீ பயப்படவேண்டியதில்லை. அவர்கள் உன்னைத் தாக்கினால் அவர்களை எப்படி மடக்குவது என்பதை நீ தெரிந்து கொண்டுவிட்டாயல்லவா'?

மகன் சிரித்துகொண்டே சொன்னான்.

''நான் அவர்களையிட்டுப் பயப்படவில்லை. தந்தையே! எனது வகுப்பு ஆசிரியரையிட்டுத்தான் கவலைப் பட்டேன். அதுதான்....!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். அப்போது அவன் உள்ளத்தில் கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது அவனுடைய தொகுதியில் இரகசியமாக விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் ஞாபகத்துக்கு வந்தது.

சாதி அடிப்படையில் அவனும் அவன் சகாக்களும் பிரசாரத்தைத் தீவிரப்படுத்தினார்கள். எல்லோரும் அவன் கருத்தை ஆமோதித்தனர்.

இன்று தான் தேர்தல் நாள். இரகசியமாக வாக்கெடுப்பு நடந்து முடிந்தது. வெற்றிதனக்கே என்று அவன் எக்களித்துக்கொண்டிருந்தான்.

வாசகுக்கள் முழுவதுமே எண்ணி முடிக்க முன்னர் துரைரத்தினத்தை அவன் தோழர்கள் தோள்மேல் தூக்கிவிட்டார்கள்.

இரு நூறு வாக்குகளில் நூறு வாக்குகள் பெரும்பான்மையால் துரைரத்தினம் மாணவ தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டான்.

இந்தத் தோல்வியைக் காசிநாதனால் தாங்கிக்கொள்ள இயலவில்லை.

''எப்பிடி என்றாலும் நான் அவனை விடத்தகுதி கூடினவன், நான் பெரிய சாதிக்காறன், இவன் என்னை விடத்தகுதியில் உயர்ந்துவிடமுடியாது. இது என்னறெயினிங்! நாங் பட்டப் படிப்பே படிக்கிறேன் ''

—தன் சகாக்களிடம் சொல்லிவிட்டு ஓடிக்கொண்டிருக்கிறான் காசிநாதன்.

786

*With Compliments from:*

A. M S. SHEENI MOHAMMAD THAMBY & BROS.

Hardware, Brassware Merchants & Manufacturer's
Representatives, Government and Estate Suppliers
Direct Importers Wholesale & Retail Merchants

★

Brass Fittings for House Buildings A **Sqeciality**

★

122, THIRD CROSS STREET,

**COLOMBO 11.**

Telepnone: 23751 Telegrams: "FATHIMA"
colomdo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்களூர்ப் பிள்ளையார் பிச்சைக்காரர்!
அங்கோர் மூலையில் ஊரின் புறத்தே
நீள வளர்ந்த ஆலின் நீழலில்
ஏழைப் பிள்ளையார் எங்கள் பிள்ளையார்
கூச்சுக் குடிசில் குடியிருக்கின்றார்!
காட்டுக் கம்புகள் நாலிலே குடிசை
போட்டுக் கொடுத்தவன் புண்ணியவாளன்.
அவனோர் ஏழை ஆதலின் ஏழையை
அவன் கவனித்ததை வியப்பெனில் அன்றாம்!
ஏழையர் என்றால் இறைவனைக் கூட
மூலையில் வைக்கும் உலகினை முனிந்து
எளிய உலகம் எதற்கென்றிருக்கிறார்.
அடிக்கடி ஏழையர் இவரிடம் வந்து
முடித்தேங்காய்கள் உடைத்து முழக்குவர்.
பிள்ளையாருக்கோ கண்களின் உள்ளே
வெள்ளம் பிறப்பினும் வெளிவிட மாட்டார்...
தனக்குள்ளேயே தான் அழுதிருப்பார்.
கல்லாயிருக்கும் பிள்ளையாருக்கே
உள்ளம் என்பது உருகும் பூமியில்
உள்ளம் என்பதை உடையவன் மனிதன்
கல்லாய் இருப்பதை எவர் கவனித்தார்?

O O O

ஒருநாள் அடியேன் பிள்ளையார் முகத்தை
ஒருமுறை பார்க்கும் உணர்வொன்றுடனும்
சுகபாடறியும் தோழமை அவரொடும்
அவர்குடில் வாசல் தனியனாய் அடைந்தேன்!
நாங்கள் இருவரும் நாளிகை பலவாய்
ஆங்கண் இருந்து தத்துவம் அளந்தோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரே! பிள்ளையாரே!
உள்ளம் உள்ளவர் உன்னிடம் வரவும்
போலி மனிதர் பக்கத் தூரில்
கோலக் கோபுரக் கோயில் நாடவும்
என்ன உலகடா...எதிலும் போலி!
ஆடம் பரத்தையே அனைத்திலும் விரும்பினர்
தேடும் இறைவனைக் கூட இவர்கள்
செல்வம் உள்ளவர் தானா? கோயில்
உள்ளே கூரை தங்கமா? அன்றா?
திருவிழாக் காலம் தேர்கள் ஓடுமா?
நாதஸ்வரக் கச்சேரி நடக்குமா?
நாட்டியப் பெண்ணார் நட்டுவ மேளம்
கூட்டம் இவற்றிற் குறைவெதும் உண்டா?
காஞ்சி புரத்துப் பட்டுடை கட்டியும்
ஊஞ்சல் இடையை ஒயிலாய் வெட்டியும்
நாகரிகத்துப் பெண்ணார் ஆங்கே
போதல் வருதல் உண்டா? இல்லையா?
என்றெலாம் பார்த்தே வழிபடுகின்றார்...
என்ன உலகடா...? என்றேன் பிள்ளையார்
சின்னஞ் சிறுவரைப் போலே சிரித்தார்.
ஏழைப் பிள்ளையார் எங்கள் பிள்ளையார்
ஆங்கே தன்னுடை அருள்வாய் திறந்து
'தம்பி' என்றழைத்தார்...தமிழில்...அம்மவோ
அந்தப் போழ்து நான் அடைந்த பெருமிதம்
எந்தத் தமிழில் எழுதுதல் கூடும்?
நானே முருகனென் றோர் கணம் எண்ணினேன்!
பிள்ளையார் சொன்னார்.. "தம்பி. உன் பேச்செலாம்
நல்லவை நல்லவை... ஆயினும் ஒன்று கேள்...
பிள்ளையார் ஒன்றும் பேயரல்லர் காண்!
நின்னை யானறிவேன் நிலமெலாம் அறிவேன்
பின்னுள அண்டம் பெருவெளி கோள்கள்
என்பன அனைத்தும் இவண் இனிதறிவேன்...
பக்கத்தூரில் பளிங்குக் கோயிலில்
உட்புறம் இருப்பவன் ஒருவனும் யானே!
இச்சிறு குடிலின் பிரசையும் நானே!
ஆங்கும் ஈண்டும் அமர்ந்ததனாற்றான்
யாவர் தன்மையும் யானறிகின்றேன்!
எவன் எவன் எங்கே செல்கிறான் என்பதை
அவண் அவண் சென்றிருந் தறிதலே ஞானம்"
என்றார் பிள்ளையார் இருந்தார்...சிலநொடி
ஒன்றும் வாயில் உரைவர வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம் அவரோர் மூச்சினை அவிழ்த்தார்..
பிள்ளையார் மூச்சு பெருமூச்சம்மா!
ஒருசில நொடிகள் ஓடிய பின்னர்
எங்கள் பிள்ளையார் இப்படிச் சொன்னார்:-
''தம்பி! மனிதனைத் தலைவன் படைத்தது
தன்னை வணங்க ஆட்கள் தேவை
என்பதற் பொருட்டோ? இல்லை! இல்லை!
நீவிர் வணங்கினும் வணங்கா திருப்பினும்
தேவன் என்பவன் தேவனே ஆவான்.
ஆயின் ஒன்றுநீர் அறிதல் வேண்டும்...
மனிதனைத் தெய்வம் மண்ணில் விட்டமை
மனிதனுள் ஓர்பெரும் அழகினை வைத்து
தானவ் வழகில் தனை மறத்தற்கே!
மனிதனில் உள்ளது மாபெரும் ஆற்றல்!
தெய்வம் படைத்த அழகினுள் அழகு
வையக மீதில் மனிதனே ஆவான்!
அத்தனை அழகு மனிதன் அழகினை
எத்தனை பாடாய் இன்று வதைக்கிறான்....
அப்பாடா... இவன் ஆட்டம் கொஞ்சமா?
எப்படிச் சொல்வேன்?'' என்றார் பிள்ளையார்.
அப்புறம் அவர் வாய் பேசவே இல்லை...
கோயிற் கூரையில் ஓணான் ஒன்று
'சர சர' என்று சத்தம்போட்டது.
மெல்லெனக் காற்றில் ஆடிய குடிசையில்
ஓரிரு சருகுகள் உதிர்ந்து விழுந்தன.
நானொரு பொழுது நானிலம் மறந்தேன்
அசையாதிருந்த பிள்ளையார் முகத்தை
அசையாதொருமுறை அவாவொடு பார்த்தேன்.
மாலை வந்தது! வீடு நோக்கி
கால்கள் திரும்பின! கழிந்தது பொழுதே!

O O O

தோழரீர் ஒன்று கேண்மினோ கேண்மின்!
ஏழைபபிள்ளையார் எங்கள் பிள்ளையார்
இன்னும் இங்குதான் குடியிருக்கின்றார்!
ஒன்றும் வாழ்க்கையில் மாறுதல் இல்லை!
ஆளும் அஃதே கோயிலும் அஃதே...
அச்சிறு வீட்டின் பிரசையும் அவரே...
காட்டுக் கம்புகள் நாலிலே குடிசை
போட்டுக் கொடுத்தவன் புண்ணியவாளன்.

வி ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாவலின் போக்கு

சி. தில்லைநாதன்

இருபதாம் நூற்றுண்டில் உரை நடையிலே தெளிவாகப் புதிய விஷயங்களை எழுதிய பலர் கூடச் செய்யுளைக் கையாளப் புகுந்த வேளையிலே, அதற்கிருந்த முன்னைப் பெருமரபு காரணமாகப் பழைய நடையினையும் யாப்பினையும் சிக்கெனப் பிடித்து நின்றனர். அதன் விளைவாகத் தவிர்க்க முடியாத வகையில் அவர்கள் யாத்த செய்யுள்களின் உள்ளடக்கமும் பழமை சார்ந்து நின்றது.

இத்தகைய ஒரு நிலையினைத் தமிழ் நாவலிலும் காணக் கூடியதாயிருக்கின்றது. தமிழ் நாவல் எழுதப்புகுந்த முதலாசிரியரான மாயூரம் வேதநாயகம் பிள்ளை முதல் இன்றைய பல ஆசிரியர்கள் வரை அனேகர் அதனை வசனகாவியமென்றே எண்ணி வருகின்றனர். இந்த எண்ணத்தின் விளைவாகவோ அல்லது தற்கால வாழ்க்கையை விட அதிகமாகக் காவியமரபுகளே தமிழ் எழுத்தாளரின் கருத்தைப் பற்றிநிற்பதாலோ அனேக நாவல்கள் பழமை சார்ந்த காவியப் பாங்கிலேயே அமைந்து காணப்படுகின்றன. தலைவர்களின் அல்லது இலட்சிய நாயகர்களின் அற்புத வரலாறுகளை விளம்பும் மிகையுணர்ச்சி நாவல்கள் பல எழுதப்படுகின்றன.

நிலமானிய சமூகத்தில், 'மன்னனுயிர்த்தே மலர்தலை உலகம்' என்று கருதப்பட்ட காலத்தில் ஒரு சிலரின் சுவைக்கு விருந்தாகத் தன்னேரில்லாத் தலைவர் ஒருவரை அணியலங்காரங்களுடன் விஸ்தாரமாகப் பாடப்பட்டது. இன்று அமுக்கும் பல வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு ஆளாகி வாழப் போராடும் சாதாரண மனிதன் அகல உயரக் கனவுகள் காண்பதில் அர்த்தமில்லை. கண்முன்னுள்ள வாழ்க்கையை மறந்து தற்காலிகமாகப் பொய்மை மயக்கத்திற் காலம் போக்க எத்தனிப்பவனுக்காக உருவான இலக்கிய வடிவமா நாவல்?

அவ்வாறாயின் பண்டிதர்கள் துன்பம் மறந்து படித்தின்புறப் பழைய காவியங்கள் இன்று பயன்படுவது போலச் சாதாரண எழுத்தறிவுள்ளவர்கள் துன்பம் மறந்து படித்தின்புற எளிய உரைநடையிலமைந்த புதிய நாவல்கள் பயன்படலாம்.

ஆனுல், நாவல் படித்தின்புற எழுதப்படும் வசனகாவியமல்ல. காவியம் தோன்றிய காலத்துக்கும் நாவல் தோன்றிய காலத்துக்கும் பலத்த வேறுபாடு உண்டு. நிலமான்ய அடிப்படையிலான கூட்டு வாழ்க்கை முறை சிதைந்து, முழுக்க முழுக்கத் தலைவர் கோல் நோக்கி வாழ்ந்தநிலை மாறி, தனி மனிதனிலை முக்கியத்துவம் பெற்று, மனிதன் தன் கால்களில் எழுந்து கைகளை விரித்து வாழ்க்கைப் போராட்டத்திற் குதித்த வேளையில் மலர்ந்த இலக்கியம் நாவல். சாதாரண மனிதரும், அவரது உணர்வுகளும் உறவுகளும் மாறிவரும் சமூகத்திற் செயல்படுமாற்றை எளிதிற் பொருள் புலப்படத்தக்க உரைநடையில் நாவல் சித்திரிக்கவேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களிடம் ஒரு பெருங்குறை காணப்படுகிறது. இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலுங்கூட அவர்கள் நிலமான்ய முடியாட்சிக்கால நினைவுகளிற் குளிர் காய்ந்துகொண்டிருக்கிருர்கள். அரசியலைப் போலவே நாவல்களிலும் நாயகர்கள் சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகளையும் சுட்டிப் பெருஞ் சாதனைகளை நிலைநிறுத்த வேண்டுமென்று கை தட்டக் காத்திருக்கிறார்கள். யதார்த்த வாழ்க்கையை நேருக்கு நேர் நோக்கும் துணிவோ 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் எங்கள் கையில்' என்று நினைக்கும் திராணியோ அவர்களுக்கு இன்னமும் வாய்க்கவில்லைப் போலும். அவர்கள் மனமுவந்து தம் இலட்சியத் தலைவர்களுக்கு வழங்கும் 'தென்னாட்டு வேந்து', 'முடிசூடாமன்னன்', 'பேரறிஞன்', 'இதயதெய்வம்', 'தளபதி', 'தனிப் பெருந் தலைவன்' முதலிய விருதுகள் அவ்வாறான எண்ணத்தை உறுதிப்படுத்துகின்றன.

பெரும்பாலான தமிழ்மக்கள் கனவுலகிலே அல்லது கற்பனை உலகிலே துன்பம் மறந்து சொகுசான இன்ப நினைவுகளுடன் காலங் கடத்தலை விரும்புவதாலேதான் அதற்குத் தோதான நாவல்களை எமது கதாசிரியர்கள் படைக்கிறார்கள் என்பது உண்மையானால், அந்த மக்கள் தொடர்ந்து அந்தக் கனவுலகிற் சஞ்சரிப்பதற்கும் இந்தக் கதாசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும். 'சாவித்திரியைச் சாகவிட வேண்டாம்', 'கௌரியை ஏன் கொலைசெய்தாய்'? என்று தொடர் கதையாசிரியர்களுக்குத் தந்தியடிப்பதாலோ, கதை சுகமே முடிந்த திருப்தியில் 'இறுதியிலே தர்மமே வென்றது' என்று பெருமூச்சு விட்டுவிட்டுத் தூங்குவதாலோ வாழ்விற் செம்மை கண்டவர்களாகவும் முடியாது; நாவல் இலக்கியம் வளர்த்தவர்களாகவும் முடியாது.

வாசகர்களைக் கவரத்தக்க வகையில் அவலங்களையும், காதலுணர்ச்சிகளையும் இலட்சிய வேட்கைகளையும் தீரசாதனைகளையும் மிகைப்பட வர்ணிக்கும் நாவல்களைப் படைப்பவர்கள்தான் இன்னும் வெற்றிபெற்ற நாவலாசிரியர்களாகப் பிரசித்தியெய்தியிருக்கிறார்கள், பொழுது போக்குப் பசிக்கு இரையாக அமைந்த வடுவூர் துரைசாமிஐயங்கார், ஆரணிகுப்புசாமி முதலியார் முதலியவர்களின் கதைகளிலும் பார்க்க இவர்களது கதைகள் அதிகதூரம் வேறுபட்டிருப்பதாகத் தெரியவில்லை.

பாத்திரங்களின் பெயர்களும் உடைகளும், களமும், நினைவுகளும் தமிழர்களுக்கு உரியனவாக அமைவதால் மட்டும் அவை தமிழர்களுடைய தற்கால வாழ்க்கைப் பின்னணியில் அமைந்த நாவல்களாகிவிடா. பொழுது போக்குக்கன்றி வேறெதற்கும் பயனற்ற நாவல்கள் குவிந்ததாலே தான் நாவல் படிப்பது மடமை என்று தமது சுயசரிதத்தில் திரு. வி. க. குறிப்பிட்டிருக்கவேண்டும்.

அன்புக்கும் காதலுக்கும் தியாகத்துக்கும் அதீத முக்கியத்துவம் கொடுத்து அவையே சாசுவதமான உன்னத மனித உணர்ச்சிகள் என்று திரும்பத் திரும்ப எழுதிக்கொண்டிருக்கும் கதாசிரியர்கள் தமிழ்ப் பெருமையையும் திறமையாகப் பயன்படுத்துகிறார்கள். இவற்றுக்குப் புனிதத்துவமும் தெய்வீக அர்த்தமும் கற்பிப்பதிற் காட்டும் அக்கறையை இன்றைய மனிதர்களின் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதிற் செலுத்தினால் எவ்வளவோ நன்றாயிருக்கும்.

அனேக ஆசிரியர்கள் தலைநகரங்களிலே தங்கியிருந்து கொண்டு சினிமாப்படங்களாலும் மேனாட்டு நூல்களாலும், பிரபல பத்திரிகைகளாலும் அருட்டப்பட்டு நடக்க முடியாத, சிலவேளைகளில் நடக்கக்கூடாத சம்பவங்களை கதம்பம்பண்ணிப் பரபரப்பூட்டுகிறார்கள். இவ்வாசிரியர்கள் வாழும் தலைநகர் வாழ்விலே திளைத்து அதன் சூட்சுமங்களை புரிந்துகொண்டவர்களுமல்லர்; கிராமப்புறவாழ்வை ஆழ்ந்துணர்ந்தவர்களுமல்லர்.

பொதுவாகப் பார்க்கும்போது தமிழ் வசன நடையும், காதல் சோக சம்பவங்களைத் திறமையாக வர்ணித்துக் கதைபண்ணுந் திறனும் கைவரப்பெற்றமையால் நாவலாசிரியர்களாகிவிட்டவர்களே அதிகமாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் சமகால வாழ்க்கைப் பிரச்சினைகளையும் உள்ளிரகசியங்களையும் அடிப்படை உறவு முறைகளையும் ஆழ அகல ஊடுருவித் தரிசித்தவர்களல்லர்.

தற்கால மனிதனின் பிரச்சினைகளையும், இதயத் துடிப்புகளையும், போராட்டங்களையும் சரியாக இனங் கண்டு கொள்ளாத காரணத்தினால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் புனையும் சம்பவங்களையும், தற்செயல் நிகழ்ச்சிகளையும், விபத்துக்களையும் நம்பியே தமது பாத்திரங்களையும் இவர்கள் இயக்குகிறார்கள். அந்தப் பாத்திரங்களை விரும்பியவாறு இயக்கும் பிரம்மாக்கள் தாங்களே என்று எண்ணிக்கொண்டு, வாழ்க்கை என்ற கதையில் வரும் பாத்திரங்களை இயக்கும் சமூக சக்திகளை முற்றாக மறந்துவிட்டு, வாசகரின் ஆவலைத் தூண்டும் வகையில் சில்லறை விஷயங்களுக்கு அழுத்தம் கொடுத்து விரித்துக் கதை பண்ணுகிறார்கள். இப்படியானவர்கள் பிரசித்திபெற்றுவிட்டால் பிரபல பத்திரிகைகளில் அவர்களே தொடர்கதைகள் எழுதுவார்கள்.

அத்தொடர்கதைகள் தொடர்ந்து நீண்டு வாசகரை அன்றாட வாழ்க்கைப் பக்கம் திரும்பாது வசீகரித்திழுத்துத் தாமும் இழுபடும். இவ்வாறு இழுபட்டுப் பரபரப்பூட்டிய கதைகளே நாவல்கள் என்று நூல்களாகப் பிரசுரகர்த்தாக்களால் வெளியிடப்படும். பிரபல பத்திரிகைகளில் வெற்றிகரமாக உலாவந்த தொடர்கதைகளை வெளியிடப் பிரசுரகர்த்தாக்கள் தயங்குவதில்லை. பிரசித்திபெறாத ஆசிரியர்கள் சுயமாய் எழுதியதைப் படித்து எடைபோட்டு வெளியிட எத்தனைபேர் இருக்கிறார்கள்? அப்படி நல்லனவற்றை இனங்கண்டு ஆசிரியரின் பிரசித்தியை நோக்காமல் வெளியிட வல்லவர், அப்படைப்பைத் தம் பெயரிலேயே வெளியிட்டு விடவும் கூடுமல்லவா?

இப்படியான நிலைமைகளாற் பிரசித்திபெற்றவர்களே தொடர்ந்து எழுதமுடிகிறது. அவர்களுக்கென்று ஒரு சந்தை இருக்கும் மட்டும் அவர்கள் கடைகளை மூடமாட்டார்கள். அவர்களது சமூக நாவல்கள் இல்லாவிட்டால் சரித்திர நாவல்கள் இருக்கும்.

சரித்திர நாவல்கள் வீரதீர காதல் சம்பவங்களோடு கலர்ப்படங்கள் மாதிரியான மகோன்னத படைப்புக்களாய் அமையும். பாரதியாரின் ''பாஞ்சாலி சபதத்''தையும் புதுமைப்பித்தனின் 'சாப விமோசன'த்தையும் போலச் சமகால வாழ்வோடு அர்த்தமுள்ள வகையில் அவை அமைந்திருக்குமா வென்று கேட்கக்கூடாது. சரித்திரம் என்றால் அது செத்துப்போனவர்களின் மறைந்துபோன பண்பாடு.



## நான்தான் மனைவி!

இங்கிலாந்தை ஒருகாலத்தில் ஆண்ட விக்டோரியா அரசிக்குக் ஒரு நாள் கடுங்கோபம் வந்துவிட்டது. அவரது கணவர் அல்பேட் இளவரசர் எதுவுமே பேசாமல் தனது அறைக்குள் புகுந்து அதைப் பூட்டிக்கொண்டுவிட்டார். சினத்திலிருந்த விக்டோரியா அரசிக்கு இது மேலும் சினத்தைக் கிளறியது. ஆத்திரத்தோடு கதவைத் தட்டினார்.

''கதவைத் திறவுங்கள். நான் உத்தரவிடுகிறேன்''

''அங்கே பதில் கிடைக்கவில்லை. கதவு மூடிக்கிடந்தது. அரசி படபடப்படைந்தார். குரல் சீறியது.

உள்ளேயிருந்து அல்பேட் கேட்டார்:

'அது, யாரது?''

''நான்தான் இங்கிலாந்தின் அரசி!''

விக்டோரியா பதிலளித்த போதிலும் அவர் கதவைத் திறக்கவில்லை. கதவை அரசி நன்கு உதைத்துப் பார்த்தாள். அதை அவர் திறப்பதாகக் காணோம். அழுகை முட்டிவந்து விடும்போல இருந்தது. தழுதழுத்த குரலில் அரசி கூறினார்.

''நான் உங்கள் மனைவி, அல்பேட்!''

இப்படிக் கூறியதும் உடனே கதவு திறக்கப்பட்டது. அல்பேட்டின் முகம் புன்னகையும் பிரகாசமுமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத் தமிழர்கள் ஒரு பேரரசை வைத்துக்கொண்டு துப்பறியும் தொழிலுக்கு வேண்டிய தீரமும் சமயோசித புத்தியுமின்றித் திணறுகிறார்கள் என்றால், வாளெடுத்து வீரங்காட்டிக் கட்டழகுக் கன்னியரைக் கைப்பிடித்து வழி தெரியாது திகைக்கிறார்கள் என்றால், அவையே அவர்கள் வாழ்வில் தலையான பிரச்சினைகள் என்றால், இந்தச் சரித்திர நாவல்கள் அவர்களுக்குப் பயனும் அர்த்தமும் பயக்கவல்லன. ஐம்பது நூறு பேரைத் தனித்துநின்று போராடி வெல்லும் ஒரு சண்டை நடிகர் சொன்னார், தற்காலத் தமிழ் இளைஞர்களை வீரமிக்கவர்களாக ஆக்கும் இலட்சியத்தைத் தமது தலைமேலே தான் கொண்டிருப்பதாக அத்தகு இலட்சியம் இந்தச் சரித்திர நாவலாசிரியர்களுக்கும் இருத்தல் கூடும்.

சில ஆசிரியர்கள் உலகத்தைச் சீர்திருத்தும் நோக்கோடு தமக்கு ஏற்புடைய சிந்தனைகளினதும் கருத்துக்களினதும் சுமைதாங்கிகளாகச் சில பாத்திரங்களைப் படைக்கிறார்கள் திருக்குறள் மனிதர்களும், காந்திய மனிதர்களும், மார்க்சீய மனிதர்களும், தமிழுணர்ச்சி மனிதர்களும், திராவிடப்பற்றுமிக்க மனிதர்களும், ஆரிய எதிர்ப்பு மனிதர்களும், இருப்புவாத மனிதர்களும் இவர்களது படைப்புக்கள். மனித இயல்புகளையும், அவற்றின் அடிப்படையிலான உறவுகளையும் இயக்கங்களையும் கவனிக்காது படைக்கப்படும் இப்பாத்திரங்கள் கருத்துக்களைச் சுமக்கும் உயிரற்ற வாகனங்களாகிவிடுகின்றன. ஏழைக்கென்றும், பணக்காரருக்கென்றும் சில இயல்புகளையும் இயக்க முறைகளையும் பொதுவாகக் கற்பிப்பதும் சாலாது. அமெரிக்க ஏழையினதும் யாழ்ப்பாணத்து ஏழையினதும் சிந்தனைகளும், மதிப்பீடுகளும், நடத்தையும் ஒன்றாயிருக்குமென்று கருதுதல் ஏலாது.

எவ்வாறாயினும், இன்றைய எமது சமுதாய மாற்றம் விரிவான பூரணமான விளக்கம் பெற்ற தெளிவு நிலையிலே தான் தமிழில் நாவல் இலக்கியம் வளரும். தற்கால வாழ்க்கை பற்றிய அறிவும், அனுபவபூர்வமான உணர்வும் உள்ள எழுத்தாளர்களின் நாவல்கள் வெளிவர வழிபிறக்க வேண்டும். தற்கால, இலௌகிக வாழ்க்கையிற் பொருளினை இணைக்கும்' சக்தியற்ற கதைகள் எவ்வளவு நீண்டு வளர்ந்தாலும் அவை நாவல் இலக்கியங்களாகும் தகுதி பெறா.

## ஏன் தவறினீர்கள்?



தோமஸ் மூர் ஒரு கவிஞர், ஒரு சமயம் லண்டன் கிளப் ஒன்றால் கௌரவிக்கப்பட்டார். கூட்டத்தில், அவரை அணுகிய பிரபு ஒருவர் தோமஸ் மூரிடம் கேட்டார்.

''திரு. மூர் அவர்களே! உங்களது தந்தை கடைக் காவலாளியாமே! இது உண்மையா?''

மூர் கூறினார்;

''ஆமாம்... அப்படித்தான் இருந்தார் ஆனால் அவர் மிகவும் நேர்மையானவர்!''

அந்தப் பிரபு ஏதோ ஒரு ஆத்மதிருப்தியோடு மேலும் தொடர்ந்தார்.

''கேட்க சுவாரஸ்யமாக இருக்கிறது. உங்களிடம் கேட்க ஒன்ற விரும்புகிறேன் நீங்களும் உங்கள் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றியிருக்கலாமல்லவா?''

மூர் சொன்னார்;

''ஏனென்றால் பிரபு அவர்களே: எனது திறமை வரம்புக்குட்பட்டதாக இருந்துவிட்டது. அது சரி உங்கள் தந்தை ஒரு கண்ணியம் மிக்க கனவான் என்று கேள்விப்பட்டேன். நானும் உங்களை ஒன்று கேட்கிறேன். நீங்கள் ஏன் உங்கள் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றத் தவறிவிட்டீர்கள்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண் குரல்

நிர்மால் சரத்சந்திரா

தமிழில்: ஐ. தி. சம்பந்தன்

டெலிபோன் சில விஞடிகளுக்கு ச் சத்தம் செய்துவிட்டு நின்றுவிட்டது. மீண்டும் இடையிடையேவிட்டு விட்டுச் சத்தம் செய்தது.

யார் இந்த நேரத்தில் இப்படிப் பேசப்போகின்ருர்கள் மணிக்கூடு சரியாக எட்டுக் காட்டிற்று. உத்தியோகத்தர் நாளாந்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு இன்னமும் ஒரு மணித்தியாலம் இருந்தது.

வேண்டாவெறுப்பாக டெலிபோன் றிசீவரை இழுத்துக் காதில் மாட்டிக்கொண்டேன்.

''ஹலோ''

''ஹலோ'' என்றேன் நான்.

''இங்கே நூறின்''!

''எப்படி உங்கள் சுகம்?''

''நல்ல சுகம், நன்றி''

''நீ எங்கிருந்து பேசுகிருய்''! சற்று உணர்ச்சியோடு கேட்டேன்.

''இந்த உலகத்திலிருந்து''

''நல்ல காலம், சந்திரமண்டலத்திலிருந்தல்லவே?''

''நான் அங்கிருந்தால் கொடுத்து வைத்தவளல்லவோ'' என்றவள், இதுதான் என் கடைசி வார்த்தை என்ருள். அவள் குரலில் ஏக்கம் பிரதிபலித்தது. அவ்வளவுதான் டெலிபோனும் துண்டிக்கபபட்டுவிட்டது. பிரமையுடன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன்.

நூறினை எப்படி முதலில் சந்தித்தேன் என்று ஞாபகம் இருக்கிறது. நான் அவளை பஸ்ஸில் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆனல் அன்று அவள் எப்பொழுதும் காணப்படாத அழகுடன் காணப்பட்டாள். செக்கச் சிவந்த மேனி, சொண்டுக்குச் சிவப்பு, கருவண்டுக் கண்கள், இமையில் பூசிய மை இவையெல்லாம் அவளின் அழகைப் பிரமாதமாகவும், கவர்ச்சியாகவும் ஆக்கிவிட்டன.

நாங்கள் பிரயாணம்செய்த பஸ் இடம் எதுவும் இல்லாத அளவிற்கு பிரயாணிகளால் நிறைக்கப்பட்டிருந்தது. நான் இருந்த இடத்திற்கு அருகில் அவள் நின்றிருந்தாள். பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்களே அது உண்மையோ என்னவோ, நான் நெருங்கியிருந்து சிறிது இடம் கொடுத்தேன். கானலில் களைத்தவன் நிழல் கண்டால் தயங்கமாட்டானே, அதுபோல் அவளும் வேகமாகச் சென்ற பஸ்ஸின் ஆட்டத்தினல் அலைக்கப்பட்டு, அல்லற்பட்டவள் அல்லவா, உட்கார்ந்துவிட்டாள். அவள் எனக்குப் பக்கத்தில் இருந்துகொண்டதால் இருவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

சந்தர்ப்பவசத்தால் நாம் என்ன கதைத்தோம் என்பதைச் சரியாக ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியவில்லை. ஆனல் தனது பெயர் நூறின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், தாபனமொன்றில் தொலைபேசி இயக்குநராக வேலைசெய்வதாகக் கூறியது இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. தன் மீது விருப்பங்கொண்டு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டவருக்கு முதல் சந்தர்ப்பத்திலேயே தனது உள்ளக் கிடக்கைகளை எடுத்துக் கூறிய அவள்போன்ற ஒருத்தியைக் காண்பது அரிது.

எனது டெலிபோனின் இலக்கம் நூறினுக்கு எப்படித் தெரியவந்தது? நான் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது யாருடனோ நடத்திய சிறிது சம்பாஷணையின்போது வெளியிடப்பட்டது, அவள் காதில்பட்டிருக்கும் இவையெல்லாம் என் மனக்கண் முன் தோன்றி மறைந்தன.

நான் அவளுடன் கொஞ்சம் கூடுதலாகக் கதைத்திருக்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனால் அதற்கிடையில் டெலிபோன் துண்டிக்கப்பட்டுவிட்டது. அதனால் நான் ஏமாற்றமும், மனக் குழப்பமும் அடைந்தேன். அவள் திரும்பவும் டெலிபோனில் பேசுவாள் என எதிர்பார்த்தேன்.

எமது ஆபீஸ் கூட்டப்படும் போது, அதனால் எழும்பிப் பறக்கும் தூசிகள், துடைக்கப்பட்ட மேசை மீது மீண்டும் சில நிமிடங்களில் படிந்தன.

நன்றாகத் திறக்கப்பட்டிருந்த யன்னல் வழியாக வந்த வாடைக்காற்று என் வாலிப மனதை வாட்டியது. அதனால் துர்நாற்றம் அங்கு இல்லாமற் போயிற்று.

மின்விசிறிகள் மிக விசித்திரமாகச் சுற்றத் தொடங்கின. மாலையில் நிறுத்தப்படும் வரையும் அவைகள் சுழன்றுகொண்டே இருக்கும். கிர்... கிர்... கிர்... என்ற ஒரே சத்தம் அறை முழுவதும். அவசரமாக வரும் காலடிச் சத்தம் விருந்தையில் கேட்டது. பின் படிப்படியாகக் குறைந்து விட்டது.

இன்னும் பத்து நிமிடங்களில் மேல் உத்தியோகத்தர் வந்துவிடப் போகின்றார். அதற்கு முன் அவள் மீண்டும் பேசமாட்டாள் போலத் தோன்றுகிறது. நான்தான் பரிதாபத்திற்குரியவனாவேன், என்று எனக்குள் கூறிக்கொண்டேன்.

டெலிபோன் மீண்டும் அடித்தது. நான் இடத்திலிருந்து பாய்ந்தோடி, றிசீவரை இழுத்து எனது காதில் வைத்தேன். ''ஹலோ'' என இரைச்சலோடு ஒரு ஆண் குரல் கேட்டது. ஒரு வார்த்தை கூடப் பேசாமல் படக்கென்று றிசீவரை அப்படியே வைத்துவிட்டேன்.

பியோன் இன்னமும் அறையை ஒழுங்குபடுத்திக்கொண்டே இருந்தான். றெயில் பைல்கள் நிரம்புமளவிற்கு அங்கும் இங்குமாக பைல்களைப போட்டான். இன்னமும் சில நிமிடத்தில் விரல்களின் விசையினால், பக்கக் கணக்காக எழுதுப் பிரதிகள் அச்சிடப்போகும் தட்டச்சின் தூசிகளும் துடைக்கப்பட்டன.

திறைசேறிக் கட்டிடத்தின் இரு வாயில்களிலும் அலுவலக உத்தியோகத்தர்கள் வந்து குவிந்துகொண்டே இருந்தனர். அவர்களுடைய உதடுகளில் புன்சிரிப்பைக் காணவில்லை, அவர்களுடைய கால்கள் தானாகவே அடியெடுத்து வைத்துக்கொண்டிருந்தன. திறைசேரி அறையொன்றில் அடைபட்டிருப்பது அதிகமான உத்தியோகத்தர்களுக்குப் பெரும் அலுப்பும் சலிப்புமாகவிருந்தது.

மனத்தாபங்கள் அவர்களது முகங்களில் தாண்டவமாடின. வாழ்க்கை என்னும் படகை ஓட்டும் பொழுது ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணாதவர்கள் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளொதுவுமின்றி சஞ்சலத்துடன் காணப்பட்டனர்.

பதவியாளர் அலுவலகத்துக்குள் நுழைந்ததும் உத்தியோகத்தர்கள் விறுவிறுப்பாக வேலைசெய்யத் தொடங்கினர். அலுவலகத்தில் சுறுசுறுப்புக் காணப்பட்டது. பைல்கள் உள்ளேயும் வெளியேயும் நகரத் தொடங்கின. மின்விசிறியின் கிர்... கிர்... கிர்... என்ற தொடர்பான சத்தமும், ராப்... ராப்... டக் டக்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தட்டெழுத்தச்சின் அச்சமும் மற்றைய இரைச்சலுடன் கலந்தன.

''நூறின் மீண்டும் டெலிபோனில் பேசுவாளா'' ஒரு பெண் குரல் என்னுடன் கதைக்க விரும்புகிறதென்று உயர் உத்தியோகத்தர் அறிந்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பார். அதைப்பற்றி அவர் ஏன் ஐயம்கொள்ளவேண்டும்?

அந்தப் பெண்குரல், எனது மனைவியினதோ, சகோதரியினதோ, அல்லது மாமியினதோ, இல்லை சினேகிதியினுடையதாகத்தான் இருந்தாலும், என்னைப்பற்றி அவர் தவறாக விளங்கிக்கொள்வாரா?

டெலிபோன் மீண்டும் அலறியது. இம்முறை சில நிமிடங்கள் மட்டும்தான். எனது இதயம் விசையாக அடிக்கத் தொடங்கியது. எனது காதுகள் புல்லரித்தன.



உயர் உத்தியோகத்தர் கேட்கும் கருவியைத் தூக்கினார். நடுக்கத்துடன் சில வினாடிகள் கதைத்தார். இதே போன்ற வார்த்தைகள் முன்பும் நூற்றியொரு முறை கதைத்திருப்பதை நான் கேட்டிருக்கிறேன். வாழ்க்கை என்பது நடந்தவற்றையும், சம்பவங்களையும் படம் பிடித்துக் காட்டும் ஒரு சக்கரம்.

பைக்களைப் பார்ப்பதும், குறிப்புரைகள் வரைவதும், றெயில் போடுவதாக நான் முழுவதும் பாடுபட்டுக்கொண்டிருந்தது, பாடிக்கொண்டு



# 100-வது வயதில்....

மணிலாவைச் சேர்ந்த செலஸ்ட் ஜோரரா ஓர் விதவை. இவர் முதல் தடவையாக இளம் பெண் ஒருத்திக்குப் பெண் தோழியாக—மணவினையில் கலந்துகொண்டார். அப்பொழுது இவர் ஒரு குடு குடு பாட்டி. வயது நூறு. இவர் யாருக்குப் பெண்பிள்ளைத் தோழியாகக் கலந்துகொண்டார் தெரியுமா?

தனது பூட்டியின், பதினெட்டு வயது மகளுக்குத்தான்.


நெடுங்கேணியில்
உங்கள்
அபிமானத்துக்குரிய
'அஞ்சலி'
கிடைக்கும் இடம்
செல்வம் ஸ்டோர்ஸ்,
பிரதான வீதி,
நெடுங்கேணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகப் போக தொனி குறைந்து கொண்டு போகும் கிராமப்போன் தட்டுக்கள் போல பெரும் சலிப்பாக இருந்தது அலுவலக வாழ்க்கை என்பது முடிவில்லா ஒன்று. எட்டு மணித்தியால வேலை நேரத்தைக் கடத்திச்செல்வதற்கு மணிக்கூட்டிற்கு எவ்வளவு நேரம் எடுக்கிறது.

நான் யன்னல்ஊடாக வெளியே பார்த்தபோது பல மாடிகளைக் கொண்டுள்ள இன்சூரன்ஸ் கட்டிடத்தின் கோபுரம், மாலையில் அஸ்தமிக்கும் சூரிய ஒளியை எதிர்த்துக் கொண்டு கெம்பீரமாய்க் காட்சியளித்தது. பிரகாசம் பொருந்திய மத்திய வங்கிக் கட்டிடம் தனக்கு முன் தோன்றிய இன்சூரன்சுக்குச் சவால் விடுவதுபோல கெம்பீரமாக வளர்ந்துகொண்டிருப்பது என் மனச் சிந்தனையைச் சிதைத்தது. அதனால் எனது எண்ணங்கள் எல்லாம் சின்னா பின்னமாயின. என்னால் சிந்திக்கவே முடியவில்லை. காலையில் இருந்தளவு பைல்களின் அளவே எனது மேசையில் மாலையிலும் நிறைந்திருந்தன. இன்று ஒரு சஞ்சலம் நிறைந்தநாள், நானே என்னை நொந்துகொண்டேன்.

இன்றுமொரு வேலைநாள் போய்க் கொண்டேயிருந்தது, அலுவலக உத்தியோகத்தர்கள் வாயில் வழியாக வெளியேறிக்கொண்டிருந்தனர்.

இன்றைய நாள் எனக்கு ஏமாற்றத்தைத் தந்த நாளாகும். காலையில் டெலிபோனில் பேசியது நூறினாக இருந்தால், எனது டெலிபோன் எண் அவளுக்குத் தெரியுமாகையால், அவள் மீண்டும் கட்டாயம் என்னுடன் டெலிபோனில் கதைத்திருப்பாள் தானே.

அதே பெயருள்ள வேறு பெண்ணாக இருக்கக்கூடுமா. அப்படியானால் டெலிபோனில் நான் கேட்ட இனிமையான மென்குரல் நூறினாக இருக்க முடியாதா அல்லது அதே பெயருள்ள அவளது இனிய குரல் போன்ற இன்னொருத்தியாக இருக்கக் கூடும், என என்னுள்ளே சிந்தித்தேன். சரி! அடுத்தநாள் காலையிலாகுதல் நூறின் குரலைக் கேட்கலாம்தானே என்ற நம்பிக்கையுடன் எனது பைலை எடுத்துக்கொண்டு அறையைவிட்டு வெளியேறினேன், நிம்மதியற்றமனதுடன்.


# வத்தளையில்

## சுவையான சிற்றுண்டிவகைகளுக்கும்

சிங்கள, தமிழ், ஆங்கில தினசரி
பத்திரிகைகள், எல்லா வித
ஈழ, வெளிநாட்டுச் சஞ்சிகைகளுக்கு
சிறந்த இடம்,

எமது

## கிருஷ்ண பவான் ஹோட்டல்

150, நீர்கொழும்பு ரோட்,
மார்கட் சந்தி, வத்தளை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்கொழும்பில்

உங்களுக்குத் தேவையான

கேக் ஆடர்களுக்கும்

சுத்தமான

சாப்பாடு, தேநீர், சிற்றுண்டி

வகைகளுக்கும் சிறந்த இடம்

# டயஸ் பேக்கரி

எல்லா விருந்து வைபவங்களுக்கும்,

சிறந்த முறையில் உணவு தயாரிப்பவர்கள்

191, மெயின் வீதி,

நீர்கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களிடம்

எல்லா விதமான

உயர்ந்த ரகமான

ஜவுளி தினுசுகள்

★

மலிவான

விலையில்

பெற்றுக்கொள்ளலாம்





**விஜித்தா** டெக்ஸ்டைல்ஸ்

81 - 83, மெயின் வீதி,

கொழும்பு-11.

டெலிபோன்: 25440

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மங்களகரமான திருமணங்கள்

மகிழ்ச்சி நிறைந்த வைபவங்களுக்கு
சிறுவர்களின் தைத்த ஆடைகளுக்கும்
சிங்காரிகளின் கண்கவர் பட்டு, வாயல், கொட்டன்
சாரிகளுக்கும்

# குறிஞ்சி மாநிலத்தில்

உயர்ந்த இடம்

# "மோகன்ஸ்"

நிர். 2, புதிய கடை வீதி,
நுவரெலியா.

போன்: 342

தங்களின் மேலான விஜயத்தை அன்புடன் எதிர்பார்க்கிறோம்.

---

## உங்கள் விருப்பத்திற்கேற்றபடி

# ரிfபோம் சேட்டுகள்

- ★ 65/35- டெட்ரோன் கொட்டன்
- ★ 80/20- டெட்ரோன் கொட்டன்
- ★ நைலோன் லக்ஸரி

ஆகிய வகைகளில் எல்லா சைஸ்களிலும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

*தயாரிப்பாளர்கள்:*

# அலி சேட் மனுபக்டரி

125, மேசஞ்சர் வீதி,
கொழும்பு-12

போன்: 32775


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANJALI JUNE, 1971 Registered as a Newspaper in Ceylon No. QB 59/300-3959


# ரவி

## பிரஷ் உற்பத்தியில்
## முதல் நிற்கும் ஸ்தாபனம்

எவ்வித பிரஷ் தேவையாயினும், அதைப் பூர்த்தி செய்ய
"ரவி" உண்டு.

★

பார்த்துத் தேர்ந்தெடுங்கள்
'ரவி' காட்சி நிலையத்தில்

★

# ரவி இன்டஸ்ட்ரிஸ் லிமிட்டெட்

"பிரஷ் உற்பத்தியாளர்கள்"

40, கேய்சர் வீதி,

கொழும்பு.

தொலைபேசி இல: 20052 கொழும்பு.


198, நீர்கொழும்பு வீதி, வத்தளையிலிருக்கும் ஏ. எம். செல்வராஜா அவர்களால் 79, முதலாம் மகுதி ஒழுங்கை, கொழும்பு-12 ல் இருக்கும் சித்ரா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org